முதன்மை சார்பு நீதிமன்றம், கோயமுத்தூர்

**முன்னிலை: திரு. K.செந்தில்குமார், பிஏ, பிஎல்,**

**முதன்மை சார்பு நீதிபதி, கோயமுத்தூர்**

**2026–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24–ம் நாள், வெள்ளிக்கிழமை**

**அசல் வழக்கு எண்**.1299/2017

(CNR No.TNCB08-002120-2017)

அருள்மிகு முட்டம்
நாகேஸ்வர சுவாமி கோவில்
அதன் பிரதிநிதியாக
நிர்வாக அலுவலர் – **வாதி**

/எதிர்/

1. குட்டியம்மாள்
2. பழனிச்சாமி
3. பாலசுப்பிரமணியன்
4. மரகதம்
5. சகுந்தலா – **பிரதிவாதிகள்**

**அசல் வழக்கு எண்**.1407/2017

(CNR No.TNCB08-002299-2017)

அருள்மிகு முட்டம்
நாகேஸ்வர சுவாமி கோவில்
அதன் பிரதிநிதியாக
நிர்வாக அலுவலர் – **வாதி**

/எதிர்/

கமலாத்தாள் – **பிரதிவாதி**

**அசல் வழக்கு எண்**.1499/2017
(CNR No.TNCB08-002360-2017)

அருள்மிகு முட்டம்
நாகேஸ்வர சுவாமி கோவில்
அதன் பிரதிநிதியாக
நிர்வாக அலுவலர் – **வாதி**

/எதிர்/

R. சின்னசாமி – **பிரதிவாதி**

**அசல் வழக்கு எண்**.1507/2017
(CNR No.TNCB08-002361-2017)

அருள்மிகு முட்டம்
நாகேஸ்வர சுவாமி கோவில்
அதன் பிரதிநிதியாக
நிர்வாக அலுவலர் – **வாதி**

/எதிர்/

1. லோகநாயகி
2. A. நவீன் – **பிரதிவாதிகள்**

**அசல் வழக்கு எண்**.1850/2017
(CNR No.TNCB08-003007-2017)

அருள்மிகு முட்டம்
நாகேஸ்வர சுவாமி கோவில்
அதன் பிரதிநிதியாக
நிர்வாக அலுவலர் – **வாதி**

/எதிர்/

1. N. சுப்பிரமணியம்
2. K. வள்ளியம்மாள்
3. K. மரகதம்
4. K. அய்யாசாமி
5. K. சதீஷ்குமார்
6. N. அருணாதேவி
7. K. சந்திரா – **பிரதிவாதிகள்**

**அசல் வழக்கு எண்**.312/2018
(CNR No.TNCB08-000697-2018)

அருள்மிகு முட்டம்
நாகேஸ்வர சுவாமி கோவில்
அதன் பிரதிநிதியாக
நிர்வாக அலுவலர் – **வாதி**

/எதிர்/

A. ஆறுசாமி – **பிரதிவாதி**

**அசல் வழக்கு எண்**.313/2018
(CNR No.TNCB08-000698-2018)

அருள்மிகு முட்டம்
நாகேஸ்வர சுவாமி கோவில்
அதன் பிரதிநிதியாக
நிர்வாக அலுவலர் – **வாதி**

/எதிர்/

R. துரைசாமி – **பிரதிவாதி**

**அசல் வழக்கு எண்**.314/2018
(CNR No.TNCB08-000700-2018)

**அருள்மிகு முட்டம்**
**நாகேஸ்வர சுவாமி கோவில்**
**அதன் பிரதிநிதியாக**
**நிர்வாக அலுவலர்** – **வாதி**

**/எதிர்/**

R. காளிசாமி – **பிரதிவாதி**

**அசல் வழக்கு எண்**.1650/2019
(CNR No.TNCB08-003178-2019)

**அருள்மிகு முட்டம்**
**நாகேஸ்வர சுவாமி கோவில்**
**அதன் பிரதிநிதியாக**
**நிர்வாக அலுவலர்** – **வாதி**

**/எதிர்/**

B. கவிதா – **பிரதிவாதி**

**அசல் வழக்கு எண்**.1654/2019
(CNR No.TNCB08-003177-2019)

**அருள்மிகு முட்டம்**
**நாகேஸ்வர சுவாமி கோவில்**
**அதன் பிரதிநிதியாக**
**நிர்வாக அலுவலர்** – **வாதி**

**/எதிர்/**

1. R. பழனியம்மாள்
2. R. ரத்தினம்மாள்
3. R. பர்வதம்
4. R. கதிர்வேல் – **பிரதிவாதிகள்**

**அசல் வழக்கு எண்**.1656/2019
(CNR No.TNCB08-003176-2019)

அருள்மிகு முட்டம்
நாகேஸ்வர சுவாமி கோவில்
அதன் பிரதிநிதியாக
நிர்வாக அலுவலர் – **வாதி**

/எதிர்/

L. கோமளம் – **பிரதிவாதி**

**அசல் வழக்கு எண்**.1658/2019
(CNR No.TNCB08-003179-2019)

அருள்மிகு முட்டம்
நாகேஸ்வர சுவாமி கோவில்
அதன் பிரதிநிதியாக
நிர்வாக அலுவலர் – **வாதி**

/எதிர்/

1. M. பழனிச்சாமி (இறப்பு) *
*2. பொன்னம்மாள்
*3. சாந்தி – **பிரதிவாதிகள்**

*(Amended as per order in
IA 1/2025 dated 01.11.2025)

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பு 18.04.2026 அன்று இறுதி விசாரணைக்காக வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. P. கதிர்வேல்** அவர்கள் முன்னிலையாகியும், அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், நீதிமன்றம் அழைத்தும் ஆஜராகாததால் அ.வ.எண்.1299/2017 வழக்கின் 4, 5 பிரதிவாதிகள், அ.வ.எண்.1654/2019 வழக்கின் 2, 3 பிரதிவாதிகள் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், அ.வ.எண்.1299/2017 வழக்கின் 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. P. அந்தோணி அரவிந்த்** அவர்கள் முன்னிலையாகியும், அ.வ.எண்.1850/2017 வழக்கின், 1, 2, 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. K. விஜயக்குமார்** அவர்கள் முன்னிலையாகியும், அ.வ.எண்.1850/2017 வழக்கின் 3–ம் பிரதிவாதி, அ.வ.எண்.312/2018, அ.வ.எண்.313/2018, அ.வ.எண்.314/2018, அ.வ.எண்.1650/2019, அ.வ.எண்.1656/2019, அ.வ.எண்.1507/2017, அ.வ.எண்.1499/2017, அ.வ.எண்.1407/2017, வழக்கின் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் **திரு. T.V. ரத்தினகுமார்** அவர்கள் முன்னிலையாகியும், அ.வ.எண்.1658/2019 வழக்கின் 1ம் பிரதிவாதி இறப்புற்றும், அ.வ.எண்.1654/2019 வழக்கின் 1, 4ம் பிரதிவாதிகள், அ.வ.எண்.1658/2019 வழக்கின் 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. P. அந்தோணி அரவிந்த** அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதுரையை கேட்டறிந்தும், சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையிலும் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து, இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

## தீர்ப்புரை

அனைத்து வழக்குகளிலும் தாவா சொத்தின் உரிமையாளர் வாதி என அறிவிக்க வேண்டியும், தபசில் சொத்திலிருந்து கட்டுமானங்களை அகற்றிய பின்னர் வாதி வசம் காலி சுவாதீனம் ஒப்படைப்பு செய்ய பிரதிவாதிகளுக்கு உத்தரவிடும்படிக்கும் மற்றும் செலவுத்தொகை கோரியும் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>வாதி தரப்பு வழக்கு</u>: –

i) தாவா சொத்தானது அருள்மிகு முட்டம் நாகேஸ்வரசுவாமி திருக்கோவிலுக்கு பாத்தியப்பட்டது, மேற்படி திருக்கோவில் தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ளது, அதனை நிர்வாக அலுவலர் நிர்வாகம் செய்து வருகிறார், முற்காலத்தில் கோவில் நிர்வாகத்தை அப்போதைய உள்ளூர் மக்கள் மற்றும் நியமிக்கப்பட்ட அறங்காவலர்கள் செய்து வந்தனர்,

ii) தாவா சொத்து முழுவதும் கோவிலுக்கு **தேவதாய இனாமாக** கொடுக்கப்பட்டிருப்பினும், அதனை பல்வேறு காலக்கட்டங்களில் சொத்தானது ஆக்கிரமிப்பாளர்களால் கையாளப்பட்டு வந்தது, சொத்தின் ஆக்கிரமிப்பாளர்கள் பல்வேறு காலகட்டங்களில் சொத்தினை அடமானம், குத்தகை மற்றும் விற்பனைக்கு உட்படுத்தியிருந்தார்கள், அச்சமயத்தில் மைனர் இனாம் ஒழிப்புச்சட்டம் 1963–ல் அமுலுக்கு வந்தது, அச்சட்டத்தில் சொல்லப்பட்ட விதிகளின்படி மைனர் இனாம்கள் ஒழிக்கப்பட்டு இனாம் நிலத்தில் முறையான ஆக்கிரமிப்பாளர்கள், அனுபவதாரர்களுக்கு ரயத்துவாரி பட்டா வழங்கப்பட்டது,

iii) தாவாகோவிலுக்கு சொந்தமான **50.50 ஏக்கரைப் பொறுத்து ரயத்துவாரி பட்டா** பெற யாருக்கு தகுதியுள்ளது என்பது குறித்து தீர்மானிக்க **கோபிச்செட்டிப்பாளையம், 4–வது செட்டில்மெண்ட் தாசில்தார் உரிய** அதிகாரியாவார், மேற்படி செட்டில்மெண்ட் தாசில்தார் அப்போதைய ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் அனுபவஸ்தர்களுக்கு அவர்களுடைய பல்வேறு கோரிக்கைகளின் அடிப்படையில் **ரயத்துவாரி பட்டா வழங்க உத்தரவிட்டார்,**

iv) மேற்படி செட்டில்மெண்ட் தாசில்தார் மேற்படி சட்டப்பிரிவு 8(2)(i)(b)–ன்படி **30.11.1968–ல் S.R.No.244/1968–ல் நில ஆக்கிரமிப்பாளர்களுக்கு ரயத்துவாரி பட்டா வழங்கினார்**, மேற்படி செட்டில்மெண்ட் தாசில்தாரின் உத்தரவுபடி நில ஆக்கிரமிப்பாளர்கள் மேற்படி சரத்துக்களின்படி ஆக்கிரமிப்பு நிலத்தின் நியாய வாடகை மற்றும் நில வருவாய் ஆகியவற்றிற்கிடையேயான வித்தியாச தொகையில் 20 மடங்கை செலுத்தினால் மட்டுமே ரயத்துவாரி பட்டா பெற முடியும், அவ்வாறு மேற்படி வித்தியாசத் தொகையை ஆக்கிரமிப்பாளர்கள் செலுத்தத் தவறினால் மேற்படி சட்டப் பிரிவு 8(2)(ii)–ன்படி வாதி கோவிலே ரயத்துவாரி பட்டா பெற தகுதியானது,

v) மேற்படி செட்டில்மெண்ட் தாசில்தார் S.R.No.244/1968–ல் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து, அதன் எதிர்மனுதாரர்கள் கோவை, இனாம் தீர்ப்பாயத்தில் C.M.A.No.188/1969 தாக்கல் செய்தனர், மேற்படி இனாம் தீர்ப்பாயம் செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவை ரத்து செய்து மனுவை கோபிச்செட்டிப்பாளையம் தாசில்தாருக்கே மீண்டும் விசாரித்து உத்தரவு வழங்க மீட்டனுப்புகை செய்து அனுப்பியது, மேற்படி இனாம் தீர்ப்பாயத்தின் உத்தரவை எதிர்த்து ஆக்கிரமிப்பாளர்கள் மேதகு சென்னை உயர்நீதிமன்றததில் இனாம் தீர்ப்பாயத்தில் S.T.A.No.48/1972 தாக்கல் செய்தனர், அதில் மேதகு சென்னை உயர்நீதிமன்றம் (இனாம் மேல்முறையீடு தீர்ப்பாயம்) C.M.A.No.188/1969–ல் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து கோபிச்செட்டிப்பாளையம் செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவை உறுதி செய்தது, **ஆக செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவு இறுதியாகிவிட்டது,**

vi) மேற்படி செட்டில்மெண்ட் தாசில்தார் பிறப்பித்த உத்தரவில் சொல்லப்பட்ட நிபந்தனையின்படி நில ஆக்கிரமிப்பாளர்கள் கோவை வட்டாட்சியர் நிர்ணயம் செய்யும் தொகையை செலுத்த வேண்டும், ஆனால் 1978 முதல் நில ஆக்கிரமிப்பாளர்கள் மேற்படி செட்டில்மெண்ட் தாசில்தார் அவர்களின் நிபந்தனை உத்தரவை பூர்த்தி செய்யவில்லை, ஆனால் அதனைவிடுத்து நில ஆக்கிரமிப்பாளர்கள் தாங்கள் நில உரிமையாளர்கள் என்பது போல் இனாம் சொத்தினை விற்கவும், பல்வேறு வில்லங்களிலும் ஈடுபட்டனர், அத்தகைய நடவடிக்கைகள் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல மற்றும் செல்லாது,

vii) பிரதிவாதிகள் தற்போதைய நில அனுபவதாரர்கள் மற்றும் ஆக்கிரமிப்பாளர்கள், மேற்படி செட்டில்மெண்ட் நடவடிக்கையின்போது தாவா சொத்தின் அனுபவமானது அழகப்ப கவுண்டர் மகன் குழந்தையப்ப கவுண்டர் வசம் இருந்தது, நிபந்தனை இனாம் பட்டா குழந்தையப்ப கவுண்டர் அவர்களுக்கு அளிக்கப்பட்டது, அவர் இறப்பிற்குப் பின்பு நிபந்தனை உத்தரவு பூர்த்தி செய்யப்படவில்லை, குழந்தையப்ப கவுண்டர் இறப்பிற்குப்பின்பு அவருடைய சட்டமுறை வாரிசுகள் சொத்தினை **28.11.2011–ல் பாகம் செய்துள்ளார்கள், அதுமுதல் சொத்தில் பிரதிவாதிகள் அனுபவத்தில் உள்ளார்கள்,**

viii) பிரதிவாதிகளின் தந்தை இனாம் செட்டில்மெண்ட் தாசில்தார் அவர்களின் நிபந்தனை உத்தரவை பூர்த்தி செய்யவில்லை, எனவே தாவா சொத்தில்

மேற்படியாருக்கு எந்தவித சட்டப்பூர்வமான உரிமைமூலம் இல்லை, எனவே பிரதிவாதிகளுக்கும் தாவா சொத்தில் சட்டப்பூர்வமான உரிமைமூலம் இல்லை, அவர்கள் வெறும் ஆக்கிரமிப்பாளர்களே, தாவா சொத்தின் முழுசுவாந்தார் வாதி திருக்கோவிலே, எனவே வாதி திருக்கோவில் பிரதிவாதிகளுக்கு 20.06.2017–ல் தாவா சொத்தின் சுவாதீனத்தை கோவில் வசம் ஒப்படைக்குமாறு அறிவிப்பு அனுப்பியது, அதற்கு பிரதிவாதிகள் எந்த பதிலும் அனுப்பவில்லை, சொத்தின் சுவாதீனத்தை வாதி கோவில் வசம் ஒப்படைக்கவில்லை, எனவே தாவா சொத்தில் வாதி திருக்கோவிலுக்கே உரிமைமூலம் உள்ளது என விளம்புகை செய்யவும், தாவா சொத்தின் சுவாதீனத்தில் பிரதிவாதிகள் வாதி திருக்கோவில் வசம் ஒப்படைக்கவும் இவ்வழக்கு தாக்கல், வாதி திருக்கோவில் சமயம் சார்ந்த நிறுவனம் என்பதால் இந்து சமய அறநிலையத்துறை சட்டம், 1959 பிரிவு 109–ன் கீழ் காலவரையறை சட்டத்திலிருந்து விலக்கு பெற்றுள்ளது, எனவே இந்த வழக்கு காலவரையறையால் பாதிக்கப்படவில்லை என்பது **வாதி தரப்பு வழக்கு.**

**3. <u>பிரதிவாதிகள் தரப்பு வழக்கு</u>: –**

i) பிராதில் சொல்லப்பட்ட அனைத்து சங்கதிகளும் தவறு, கோவிலின் நிர்வாக அலுவலர் கோவிலுக்காக இவ்வழக்குகளை தாக்கல் செய்ய அருகதை இல்லை என்பதால் வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல,

ii) ஆக்கிரமிப்பாளர்கள் மறுபயனை செலுத்த தவறியதால் மைனர் இனாம் ஒழிப்பு சட்டம், பிரிவு 8(2) (ii) –ன் படி வாதி திருக்கோவில் ரயத்துவாரி பட்டா பெறத்தக்கது என்று சொல்லியுள்ளது தவறு, 2–ம் பிரதிவாதி தகப்பனார் குழந்தையப்ப கவுண்டர் **முத்துசுவாமி** என்பவரிடமிருந்து தாவா சொத்தை கிரையம் பெற்றார், அதுமுதல் எந்தவித இடையூறுமின்றி சொத்தினை அனுபவம் செய்து வந்தார், 1901–ம் ஆண்டு முதல் முன்சுவாந்தார்கள் தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்து வந்தார்கள்,

iii) 100 ஆண்டுகளுக்கு முன்பே வாதி திருக்கோவில் சொத்தின் சுவாதீனத்தை விட்டுவிட்டது, இதற்கிடையில் மைனர் இனாம் ஒழிப்பு சட்டம் 1963–ல் நடைமுறைக்கு வந்தது, மேற்படி சட்ட சரத்துக்களின்படி கோபிசெட்டிப்பாளையம், 4–வது செட்டில்மெண்ட் தாசில்தார் தன்னிச்சையாக தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்களைப் பொறுத்து யார் பட்டா பெற தகுதியானவர் என்பதை முடிவு செய்ய நிலத்தில் பாத்தியமுள்ளவர்களுக்கு

உரிய அறிவிப்பு கொடுத்து விசாரணை மேற்கொண்டார், உரிய விசாரணைக்குப் பிறகு செட்டில்மெண்ட் தாசில்தார் அவர்கள் S.R.No.244/1968–ன்படி 30.11.1968–ல் தாவா சொத்தைப் பொறுத்து மைனர் இனாம் ஒழிப்பு சட்டம், பிரிவு 8(2)(i)(b)–ன் படி மேற்படி குழந்தையப்ப கவுண்டர் அவர்கள் கோவை, வட்டாட்சியர் நிர்ணயம் செய்யும் நியாய வாடகை மற்றும் சொத்தின் நில வருவாய் ஆகிய இரண்டிற்கும் இடையேயான வித்தியாசத்தொகையில் 20 மடங்கை மறுபயனாக அரசுக்கு செலுத்த வேண்டும் என்ற **நிபந்தனையுடன் ரயத்துவாரி பட்டா வழங்க உத்தரவிட்டார்**, எனவே அந்த உத்தரவின்படி அரசுக்கே உரிய தரப்பினர்களுக்கு அறிவிப்பு கொடுத்து மறுபயனை நிர்ணயம் செய்ய வேண்டிய கடப்பாடு உண்டு,

iv) ஆனால் கோவை, வட்டாட்சியர் அவர்கள் செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவுபடி தாவா சொத்து மற்றும் இதர சொத்திற்குண்டான நியாய வாடகையை நிர்ணயம் செய்யும் சட்டக்கடமையை செய்ய தவறி விட்டார், பிரதிவாதிக்கு தெரிந்த வரை கோவை, வட்டாட்சியர் அவர்கள் ஒருபோதும் நியாய வாடகை நிர்ணயம் செய்யவோ அல்லது உரிய மறுபயனை கோரியோ எந்த அறிவிப்பும் குழந்தையப்ப கவுண்டர் உயிர்காலத்தில் அவருக்கோ, அவரது இறப்பிற்குப்பின்பு அவரது சட்டமுறை வாரிசுகளான பிரதிவாதிகளுக்கோ அனுப்பவில்லை, எனவே 2–ம் பிரதிவாதியின் தந்தை குழந்தையப்ப கவுண்டர் செட்டில்மெண்ட் தாசில்தார் 30.11.1968–ல் பிறப்பித்த நிபந்தனை உத்தரவை கடைபிடிக்காமல் தவறிவிட்டார் என சொல்ல இயலாது, மேற்படி குழந்தையப்ப கவுண்டர் இறந்தபிறகு அவருடைய சட்டமுறை வாரிசுகள் உரிய மறுபயனை நிர்ணயம் செய்யும் பட்சத்தில், கோரும்பட்சத்தில் எப்போதும் அரசிற்கு தயாராக உள்ளனர்,

v) கோவை, வட்டாட்சியர் அவர்களின் வேண்டுமென்ற கவனக்குறைவினால்தான் மறுபயனானது தற்போதுவரை செலுத்தப்படாமல் உள்ளது, அதற்கு குழந்தையப்ப கவுண்டரோ அவரது சட்டமுறை வாரிசுகளான பிரதிவாதிகளோ காரணமில்லை, குழந்தையப்ப கவுண்டருக்கு செட்டில்மெண்ட் தாசில்தார் வழங்கிய பட்டா இறுதிநிலை அடைந்து விட்டது, அவரால் வழங்கப்பட்ட **ரயத்துவாரி பட்டா எந்த அதிகாரியாலும் தமிழ்நாடு மைனர் இனாம் ஒழிப்பு சட்டப்படி ரத்து செய்யப்படவில்லை**, குழந்தையப்ப கவுண்டருக்கு வழங்கப்பட்ட ரயத்துவாரி பட்டா தற்போதும் செல்லும், வாதியை கட்டுப்படுத்தும்,

குழந்தையப்ப கவுண்டர் தாவா சொத்தை தொடர்ந்து எந்தவித இடையூறுமின்றி அனுபவம் செய்து வந்தார், அவரது இறப்பிற்குப்பின்பு 2–ம் பிரதிவாதி மற்றும் மற்ற பிரதவாதிகளும் வாரிசு என்ற முறையில் சொத்தில் 28.11.2001–ல் பாகப்பிரிவினை செய்து கொண்டனர், அதுமுதல் பிரதிவாதிகளே உண்மையான சுவாந்தார்கள் என்ற முறையில் தாவா சொத்தில் அனுபவ சுவாதீனத்தில் உள்ளனர்,

vi) தமிழ்நாடு மைனர் இனாம் ஒழிப்பு சட்டம், 1963 பிரிவுகள் 3(a), 3(b) ஆகியவை அமுலுக்கு வந்துவிட்டதில் இனாம் சொத்துக்கள் முடிவிற்கு வந்து அனைத்து இனாம் நிலங்களும் அரசிற்கு வில்லங்க சுத்தியில் பரிமாற்றம் செய்யப்பட்டுவிட்டது, எனவே வாதிக்கு தாவா சொத்தில் எந்தவித முன்இருப்பு உரிமை ஏதுமில்லை, எனவே வாதி திருக்கோவில் அதற்கு அளிக்கப்பட்டதாக கூறும் இனாம் அடிப்படையில் தாவா சொத்தில் எந்தவித உரிமைமூலம், அனுபவ சுவாதீனத்தை கோர இயலாது ஏனெனில் மேற்படி சட்டம் அமுலுக்கு வந்த பிறகு அனைத்து இனாம்களும் ஒழிக்கப்பட்டுவிட்டன,

vii) வாதி திருக்கோவில் தவறான யூகத்தின் அடிப்படையில் இவ்வழக்கை விளம்புகை மற்றும் சுவாதீனமீட்பு பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளது, மேற்படி கோவை, வட்டாட்சியர் தாவா சொத்தில் உரிமையுள்ள அனைத்து தரப்பினர்களுக்கும் உரிய முன்னறிவிப்பு கொடுத்து நியாய வாடகை நிர்ணயம் செய்திருக்க வேண்டும், அதன்பிறகு தாவா சொத்திற்குண்டான மறுபயனை நிர்ணயம் செய்து பின்பு அதனை செலுத்துமாறு ரயத்துவாரி பட்டா பெற்றவர்களுக்கு கேட்பு அறிவிப்பு அனுப்ப வேண்டும், ஆனால் அவைகளையெல்லாம் வட்டாட்சியர் செய்யத் தவறிவிட்டார், அவர்களுடைய தவறுகைக்கு பிரதிவாதிகளும் அவர்களது முன்னோர்களும் பொறுப்பாக மாட்டார்கள்,

viii) தாவா சொத்திற்கான நியாய வாடகை நிர்ணயம் மற்றும் மறுபயன் செலுத்துதல் ஆகியவை ரயத்துவாரி பட்டா பெற்றவர்களுக்கும் அரசிற்கும் இடையேயான நடவடிக்கையே தவிர அதில் வாதி திருக்கோவிலுக்கு எந்த சம்மந்தமும் இல்லை, வாதி கூறுவதுபோல் ரயத்துவாரி பட்டா பெற்றவர்கள் சொத்திற்கு நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு நிர்ணயிக்கும் உரிய மறுபயனை செலுத்தத் தவறினால் இனாம் ஒழிப்பு சட்டம், பிரிவு 8(3)–ன் படி

அரசானது மேற்படி தொகையை வட்டியுடன் நில வருவாய் வசூலிப்பு முறையில் அதனை வசூல் செய்துகொள்ள வேண்டும், எனவே தாவா சொத்தில் வாதிக்கு எந்தவித சட்டப்படியான உரிமை ஏதுமில்லை,

ix) 100 ஆண்டுகளுக்கு முன்பாகவே தாவா சொத்தின் சுவாதீனத்தில் வாதி திருக்கோவில் இருந்து வரவில்லை, அதுமுதல் குழந்தையப்ப கவுண்டரே சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வந்துள்ளார், செட்டில்மெண்ட் தாசில்தார் ரயத்துவாரி பட்டாவைதாவா சொத்தைப் பொறுத்து குழந்தையப்ப கவுண்டருக்கு வழங்கிய பின்னர் அதன் உண்மையான சுவாந்தார் என்ற முறையில் அவரே அனுபவம் செய்து வந்தார், இந்து சமய அறநிலையத்துறை சட்டம், பிரிவு 109 ஆனது 2003–ல் சீர்திருத்தம் செய்யப்பட்டது, அதற்கு முன்பே பிரதிவாதிகளும் அவரது முன் சுவாந்தார்களும் சட்ட காலத்திற்கு மேலாகவே தாவா சொத்தில் உரிமைமூலத்துடன் தொடர்ந்து எந்தவித இடையூறுமின்றி அனுபவத்தில் இருந்து வருகிறார்கள், எனவே சட்டப்பிரிவு 109 ஆனது வாதிக்கு எந்தவித அனுகூலத்தையும் தராது, பிரிவு 109 ஆனது சுவாதீன மீட்பு பரிகாரத்திற்கு மட்டுமே பொருந்தக்கூடியது, வாதி கோரும் விளம்புகை பரிகாரத்திற்கு பொருந்தாது,

x) வாதி கூறியுள்ள C.M.A.No.188/1969 மற்றும் S.T.A.No.48/1972 ஆகியவை ரயத்துவாரி பட்டா வழங்கப்பட்ட சொத்தின் விஸ்தீரணங்களின் மாறுபாடுகள் காரணமாகத்தான் தாக்கல் செய்யப்பட்டது, தாவாசொத்தில் வாதி திருக்கோவிலுக்கு எந்தவித பாத்தியமோ, உரிமையோ, உரிமைமூலமோ கிடையாது, செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவிற்குப்பிறகு ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்குப் பிறகு எந்தவித காரணமின்றி தாவா வழக்குகள் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது, எனவே வழக்குகளானது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது,

xi) நியாய வாடகையானது கோயமுத்தூர் தாசில்தார் அவர்களால் நிர்ணயம் செய்யப்படவேண்டும், தாவா சொத்திற்கான மறுபயனானது அரசுக்கு செலுத்தப்பட வேண்டும், எனவே தமிழ்நாடு அரசு வழக்கிற்கு தேவையான மற்றும் அவசியமான தரப்பினர், தமிழ்நாடு அரசை வழக்கில் சேர்க்காததால் வழக்கு பாதிப்படைந்துள்ளது,

xii) செட்டில்மெண்ட் தாசில்தார் நடவடிக்கையில் வாதி திருக்கோவிலும் ஒரு தரப்பினர் செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவு இறுதிநிலை அடைந்துவிட்டது, அந்த உத்தரவு வாதியை கட்டுப்படுத்தும், எனவே வாதி மீண்டும் ஒரே பிரச்சனையை எழுப்ப முடியாது, எனவே செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவு இவ்வழக்கில் முன்தீர்ப்பு தடையாக செயல்படும், எனவே வழக்கானது மேற்படி மைனர் இனாம் ஒழிப்பு சட்டம், பிரிவு 43–ன் கீழ் பாதிப்படைந்துள்ளது,

xiii) சொத்தினை மதிப்பிட்டுள்ளது தவறானது, வாதி வேண்டுமென்றே சொத்தினை குறைவாக மதிப்பிட்டுள்ளார், சொத்தினை சரியாக மதிப்பிட்டிருந்தால் நீதிமன்ற பண ஆள்வரைக்கு அப்பால் சென்றுவிடும், வாதியானவர் சொத்தின் சந்தை மதிப்பிற்கு நீதிமன்ற கட்டணத்தை செலுத்தியிருக்க வேண்டும், எனவே செலுத்தப்பட்டிருக்கும் நீதிமன்ற கட்டணம் தவறானது, தாவா சொத்தினைப் பொறுத்து பிரதிவாதிகளுக்கு சரியான செல்லுபடியான உரிமைமூலம், அனுபவ சுவாதீனம் உள்ளது, பிரதிவாதிகள் ஆக்கிரமிப்புதாரர்கள் அல்ல, தாவா சொத்தின் சுவாந்தார் வாதி என சொல்லியுள்ளது தவறு, வாதி கூறுவதுபோல் பிரதிவாதிகளுக்கு எந்த அறிவிப்பும் அனுப்பப்படவில்லை, வழக்கிற்கு எந்தவித வழக்குமூலமும் இல்லை, சொல்லப்பட்ட வழக்குமூலம் பல வருடங்களுக்கு முன்பே காலாவதியாகிவிட்டது, கற்பனையான வழக்குமூலத்தைக் கொண்டு வாதி வழக்கை தாக்கல் செய்துள்ளார், வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்பது **பிரதிவாதிகள் தரப்பு வழக்கு.**

**4. <u>அ.வ.எண்.1299/2017 வழக்கில் வனையப்பட்ட எழுவினாக்கள் (10.03.2017)</u> :-**

i) Whether the plaintiff has valid title over the suit property ?
ii) Whether the defendants have not complied with the orders passed by Settlement Thasildar as claimed by the plaintiff?
iii) Whether the plaintiff is entitled to the delivery of possession sought for?
iv) To what other relief ?

**ஆ. <u>அ.வ.எண்.1407/2017 வழக்கில் வனையப்பட்ட எழுவினாக்கள் (16.10.2019)</u> :-**

i) Whether the plaintiff has valid title over the suit property ?
ii) **Whether the suit is barred by limitation as claimed by the defendants**?
iii) Whether the suit is barred by resjudicate as claimed by the defendants?
iv) Whether the defendants are trespassers as claimed by the plaintiffs

v) Whether the plaintiff is entitled to declaration and recovery of possession sought for?
vi) To what other relief ?

**இ. அ.வ.எண்.1499/2017 வழக்கில் வனையப்பட்ட எழுவினாக்கள் (05.12.2019) :-**

i) Whether the conditional order passed by Settlement Thasildar has not been complied by the occupiers an alleged by the plaintiff?
ii) Whether the plaintiff has perfected titled over the suit property?
iii) Whether the plaintiff is entitled to declaration and recovery of possession sought for after removal of structures?
iv) To what other relief?

**ஈ. அ.வ.எண்.1507/2017 வழக்கில் வனையப்பட்ட எழுவினாக்கள் (26.11.2019) :-**

i) Whether the conditional order passed by Settlement Thasildar SR.No.244/1968 has not been complied with as alleged by the plaintiff?
ii) Whether the plaintiff is entitled to seek declaration of title over the suit property?
iii) Whether the plaintiff is entitled to the recover of possession sought for?
iv) To what other relief?

**உ. அ.வ.எண்.1850/2017 வழக்கில் வனையப்பட்ட எழுவினாக்கள் (17.02.2020) :-**

i) **Whether the plaintiff has valid title over the suit property?**
ii) Whether the plaintiff is entitled to recovery of possession over the suit property after removal of super structure?
iii) Whether the plaintiff is entitled to the declaration of title sought for?
iv) To what other relief?

**ஊ அ.வ.எண்.1650/2019 வழக்கில் வனையப்பட்ட எழுவினாக்கள் (26.11.2019) :-**

i) Whether the plaintiff is entitled to the declaration as prayed for?
ii) Whether the plaintiff is entitled to the possession as prayed for?
iii) To what other relief?

**எ. அ.வ.எண்.312/2018 வழக்கில் வனையப்பட்ட எழுவினாக்கள் (31.01.2020) :-**

i) Whether the fair rent has not fixed by the Settlement Thasildar as claimed by the defendants?
ii) Whether the defendants did not comply with the condition imposed in the order passed by the Settlement Thasildar as claimed by the plaintiff?
iii) Whether the plaintiff temple is entitled to declaration of title over the suit property and delivery of possession as prayed for?
iv) To what other relief?

**ஏ.அ.வ.எண்.314/2018 வழக்கில் வனையப்பட்ட எழுவினாக்கள் (07.03.2020) :-**

i) Whether the Ramanna Gounder till his death not complied the conditional order passed by the Settlement Thasildar?
ii) Whether the Ramanna Gounder had not valid title over the suit property due to non compliance of conditional order passed by the Settlement Thasildar?
iii) Whether the plaintiff temple is absolute owner of the suit property?
iv) Whether the plaintiff temple is entitled for declaration of title and recovery of vacant possession of the suit property?
v) To what other relief the plaintiff temple is entitled?

**ஐ. அ.வ.எண்.313/2018 வழக்கில் வனையப்பட்ட எழுவினாக்கள் (18.07.2019) :-**

i) Whether the plaintiff is entitled for the relief of declaration?
ii) Whether the plaintiff is entitled for the relief of vacant possession?
iii) Whether the suit is maintainable?
iv) To what other relief?

**ஒ. அ.வ.எண்.1654/2019 வழக்கில் வனையப்பட்ட எழுவினாக்கள் (16.02.2026) :-**

i) Whether the suit is barred for non-joinder of proper and necessary party?
ii) Whether the suit is barred by the principle of resjudicate ?
iii) Whether the suit is barred U/s 43 of Tamil Nadu minor Inams (Abolition and conversion into Ryotwari)?
iv) **Whether the executive office of plaintiff temple has locus standi to file the suit?**
v) Whether the plaintiff is entitled to get declaratory relief as prayed for?
vi) Whether the plaintiff is entitled to recovery of possession as prayed for?
vii) To what other relief the plaintiff is entitled ?

**ஓ. அ.வ.எண்.1656/2019 வழக்கில் வனையப்பட்ட எழுவினாக்கள் (26.02.2021) :-**

i) Whether the plaintiff temple is entitled for the relief of declaration and possession as prayed for?
ii) To what other relief the plaintiff temple is entitled?

**ஔ. அ.வ.எண்.1658/2019 வழக்கில் வனையப்பட்ட எழுவினாக்கள் 16.02.2026 :-**

i) Whether the suit is barred for non-joinder of proper and necessary party?
ii) Whether the suit is barred by the principle of resjudicate ?
iii) Whether the suit is barred U/s 43 of TN minor Inams (Absolute and conversion into Ryotwari)?

iv) Whether the executive office of plaintiff temple has locus standi to file the suit?
v) Whether the plaintiff is entitled to get declaratory relief as prayed for?
vi) Whether the plaintiff is entitled to recovery of possession as prayed for?
vii) To what other relief the plaintiff is entitled?

**அனைத்து வழக்குகளின் பிராது மற்றும் எதிர்வழக்குரை ஆகியவைகளை முழுமையாக பரிசீலித்த வகையில் எழுவினாக்கள் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 14 விதி 5–ன் படி கீழ்கண்டவாறு மாற்றியமைக்கப்படுகிறது.**

**சீரமைக்கப்பட்ட எழுவினாக்கள் : –**

i) வாதி திருக் கோவில் சார்பாக செயல் அலுவலர் இவ்வழக்கை தாக்கல் செய்ய அதிகாரம் படைத்தவரா? அவரால் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு நிலைக்கத்தக்கதா?
ii) இவ்வழக்கை விசாரிக்க இந்நீதிமன்றத்திற்கு ஆள்வரை அதிகாரம் இல்லை என்ற பிரதிவாதிகளின் கட்சி ஏற்புடையதா?
iii) தாவா சொத்தில் வாதி திருக்கோவிலுக்கு உரிமைமூலம் உள்ளதா?
iv) வழக்கானது முன்தீர்ப்பு தடைக் கோட்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதா?
v) வாதியின் வழக்கு காலவரையால் பாதிப்படைந்துள்ளதா?
vi) செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவுபடி நிபந்தனைகளை கடைப்பிடிக்காத காரணத்தினால் பிரதிவாதிகளுக்கு தாவாசொத்தில் உரிமை அற்றுப் போய்விட்டது என்ற வாதி தரப்பு கட்சி ஏற்புடையதா?
vii) தேவையான மற்றும் அவசியமான தரப்பினர்களை சேர்க்காத தோஷத்தால் அசல் வழக்கு பாதிப்புற்றுள்ளதா?
viii) தாவாசொத்தினைப் பொறுத்து வாதி கோரியுள்ள விளம்புகைப் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?
ix) தாவாசொத்தினைப் பொறுத்து வாதி கோரியுள்ள சுவாதீன மீட்புப்பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?
x) வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் யாது?

**இருதரப்பினர்களும் சீரமைக்கப்பட்ட எழுவினாக்கள் குறித்து போதிய வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் முன்னிறுத்தியுள்ளனர்.**

5. <u>சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> : –

அனைத்து வழக்குகளிலும் வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.21 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அ.வ.எண்.1299/2017 வழக்கின் பிரதிவாதிகள் தரப்பில் 2–ம் பிரதிவாதி/பழனிச்சாமி பி.வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.5 வரையிலும், அ.வ.எண்.1654/2019 வழக்கின் 4–ம் பிரதிவாதி/கதிர்வேல் பி.வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் பி.வா.சா.ஆ.111 முதல் பி.வா.சா.ஆ.115 வரையிலும், அ.வ.எண்.1658/2019 வழக்கின் 3–ம் பிரதிவாதி/சாந்தி பி.வா.சா.3 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் பி.வா.சா.ஆ.121 முதல் பி.வா.சா.ஆ.125 வரையிலும், அ.வ.எண்.1407/2017 வழக்கின் பிரதிவாதி/கமலாத்தாள் அவர்கள் பி.வா.சா.4 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் பி.வா.சா.ஆ.6 முதல் பி.வா.சா.ஆ.17 வரையிலும், அ.வ.எண்.1499/2017 வழக்கின் பிரதிவாதி/சின்னசாமி அவர்கள் பி.வா.சா.5 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் பி.வா.சா.ஆ.18 முதல் பி.வா.சா.ஆ.40 வரையிலும், அ.வ.எண்.1507/2017 வழக்கின் 2–ம் பிரதிவாதி/நவீன் பி.வா.சா.6 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் பி.வா.சா.ஆ. 41 முதல் பி.வா.சா.ஆ.50 வரையிலும், அ.வ.எண்.1850/2017 வழக்கின் 4ம் பிரதிவாதி/அய்யாச்சாமி பி.வா.சா.7 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் பி.வா.சா.ஆ.51 முதல் பி.வா.சா.ஆ.65 வரையிலும், அ.வ.எண்.312/2018 வழக்கின் பிரதிவாதி/ஆறுசாமி பி.வா.சா.8 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் பி.வா.சா.ஆ.66 முதல் பி.வா.சா.ஆ.80 வரையிலும், அ.வ.எண்.313/2018 வழக்கின் பிரதிவாதி/துரைசாமி பி.வா.சா.ஆ.9 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் பி.வா.சா.ஆ.81 முதல் பி.வா.சா.ஆ.95 வரையிலும், அ.வ.எண்.314/2018 வழக்கின் பிரதிவாதி/காளிச்சாமி அவர்களின் மகன் அருள் பி.வா.சா.ஆ.10 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் பி.வா.சா.ஆ.96 முதல் பி.வா.சா.ஆ.104 வரையிலும், அ.வ.எண்.1650/2019 வழக்கின் பிரதிவாதி/கவிதா பி.வா.சா.ஆ.11 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் பி.வா.சா.ஆ.105 முதல் பி.வா.சா.ஆ.110 வரையிலும், அ.வ.எண்.1656/2019 வழக்கின் பிரதிவாதி/கோமளம் பி.வா.சா.ஆ.12 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் பி.வா.சா.ஆ.116 முதல் பி.வா.சா.ஆ.120 வரையிலும் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. <u>தீர்வு</u> : –

**அ. <u>வழக்கு தாக்கல் செய்யும் தகுதி</u> : –**

i) "கோவிலின் நிர்வாக அலுவலர் கோவிலுக்காக இவ்வழக்குகளை தாக்கல் செய்ய அருகதை இல்லை என்பதால் வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல" என மட்டுமே பிரதிவாதிகள் தரப்பில் கட்சி செய்யப்பட்டுள்ளது.

ii) அது குறித்து பரிசீலிக்கையில் , a) In **A. A. Gopalakrishnan -vs- Cochin Devaswom Board and others. 2007 (7) SCC 482**, Our Honble Supreme Court held that "it is the duty of the Courts to protect and safeguard the properties of religious and charitable trust from wrongful claim and misappropriation".

b) In **Durgai Lakshmi Kalyana Mandapam, a Specific Endowment to Arulmigu Siddhi Ganesar Nataraj Perumal Durgaiamman Group Temples, represented by K.Jeevanandham & another vs. Idols of Arulmigu Siddhi Ganesar Nataraja Perumal Durgaiamman Group Temples, Rep. by its Executive Officer & Others. 2023 (3) LW. 801** Our Honble High Court held that "it is the duty of the Executive Officer to file the suit to protect the property of the temple" என்ற தீர்நிலைகளில் சொல்லப்பட்டவாறு வாதி கோயிலின் நிர்வாக அதிகாரி தாவாசொத்து வாதி திருக்கோயிலுக்கு பாத்தியப்பட்டது என கட்சி செய்து அதுவகையில் தாவா சொத்தைப் பாதுகாக்க வேண்டி தாக்கல் செய்த இவ்வழக்கு சட்டநிலையில் நிலைக்கத்தக்கது என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. **அவ்வாறே சீரமைக்கப்பட்ட எழுவினா 1-க்கு வாதிக்கு ஆதரவாகவே விடை காணப்படுகிறது.**

**ஆ. <u>தேவையான மற்றும் அவசியமான தரப்பினர்</u> : –**

i) தாவா சொத்திற்கான மறுபயனானது அரசுக்கு செலுத்தப்பட வேண்டும், எனவே தமிழ்நாடு அரசு வழக்கிற்கு தேவையான மற்றும் அவசியமான தரப்பினர் என்றும், இனாம் ஒழிப்பு நடைமுறைச் சட்டப்படி கோபிச்செட்டிபாளையம், இனாம் தாசில்தார் பிறப்பித்த உத்தரவின்படி சொத்தின் அனுபவதாரர்கள் நடந்து கொள்ளவில்லை என்றால் தாவா சொத்துக்களானது அரசுக்கே சென்றடையும் என்ற நிலையில் தமிழ்நாடு அரசை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காததால்

வழக்கு பாதிப்படைந்துள்ளது என குறிப்பாக பிரதிவாதிகள் தரப்பில் கட்சி செய்யப்பட்டுள்ளது.

ii) அது குறித்து இந்நீதிமன்றம் பரிசீலிக்கையில் தாவா சொத்து மைனர் இனாம் ஒழிப்பு சட்டத்திற்குட்பட்ட சொத்து என இரு தரப்பினராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட நிலையில் மேற்படி சட்டம், 30/1963 பிரிவு 3–ன்படி கோபிச்செட்டிபாளையம், இனாம் தாசில்தார் பிறப்பித்த உத்தரவின்படி சொத்தின் அனுபவதாரர்கள் நடந்து கொள்ளவில்லை என்றால் தாவா சொத்துக்களானது அரசுக்கே சென்றடையும் என்ற நிலையில் தமிழ்நாடு அரசை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் வழக்கு பாதிப்படைந்துள்ளது என்ற கட்சி இந்த சூழ்நிலையில் ஏற்கத்தக்க வகையிலேயே அமையப் பெற்றுள்ளது. **அவ்வாறே சீரமைக்கப்பட்ட எழுவினா 7-க்கு வாதிக்கு எதிராகவே விடை காணப்படுகிறது.**

**இ, <u>காலவரைச் சட்டத்தால் பாதிப்பு</u> : –**

i) செட்டில்மெண்ட் தாசில்தார் ரயத்துவாரி பட்டாவைதாவா சொத்தைப் பொறுத்து குழந்தையப்ப கவுண்டருக்கு வழங்கிய பின்னர் அதன் உண்மையான சுவாந்தார் என்ற முறையில் அவரே அனுபவம் செய்து வந்தார், இந்து சமய அறநிலையத்துறை சட்டம், பிரிவு 109 ஆனது 2003–ல் சீர்திருத்தம் செய்யப்பட்டது, அதற்கு முன்பே பிரதிவாதிகளும் அவரது முன் சுவாந்தார்களும் சட்ட காலத்திற்கு மேலாகவே தாவா சொத்தில் உரிமைமூலத்துடன் தொடர்ந்து எந்தவித இடையூறுமின்றி அனுபவத்தில் இருந்து வருகிறார்கள், எனவே சட்டப்பிரிவு 109 ஆனது வாதிக்கு எந்தவித அனுகூலத்தையும் தராது, பிரிவு 109 ஆனது சுவாதீன மீட்பு பரிகாரத்திற்கு மட்டுமே பொருந்தக்கூடியது, வாதி கோரும் விளம்புகை பரிகாரத்திற்கு பொருந்தாது, வாதி கூறியுள்ள CMA 188/1969 மற்றும் STA.No.48/1972 ஆகியவை ரயத்துவாரி பட்டா வழங்கப்பட்ட சொத்தின் விஸ்தீரணங்களின் மாறுபாடுகள் காரணமாகத்தான் தாக்கல் செய்யப்பட்டது, தாவா சொத்தில் வாதி திருக்கோவிலுக்கு எந்தவித பாத்தியமோ, உரிமையோ, உரிமைமூலமோ கிடையாது, செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவிற்குப்பிறகு ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்குப் பிறகு எந்தவித காரணமின்றி தாவா வழக்குகள் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது, எனவே வழக்குகளானது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என பிரதிவாதிகள் தரப்பில் வாதம் செய்யப்பட்டுள்ளது.

ii) அதே வேளையில் வாதி தரப்பில், தாவா சொத்தின் அனுபவஸ்தர்களான பிரதிவாதிகள் கோபிச்செட்டிபாளையம், இனாம் செட்டில்மெண்ட் தாசில்தார் S.R.No.244 of 1968–ல் 30.11.1968 தேதியில் பிறப்பித்த உத்தரவு படி நிபந்தனைகளை கடைபிடிக்க தவறி விட்ட நிலையில் மேற்படி சட்டம், 30/1963 பிரிவு 8(2)(ii)–ன்படி வாதி திருக்கோயிலுக்கே பட்டா கிடைக்கப் பெறும் என்ற நிலையில், மேற்படி உட்பிரிவின்படி சொத்தினை பிரதிவாதிகளிடமிருந்து மீட்க இந்து சமய அறநிலைத்துறை சட்டம், பிரிவு 109–ன் கீழ் வழக்கு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி நிலைக்கத்தக்கது என வாதம் செய்யப்பட்டது.

iii) இது குறித்து இந்நீதிமன்றம் பரிசீலிக்கையில் வாதியின் பிராது சங்கதிகளின்படி கோபிச்செட்டிபாளையம், இனாம் செட்டில்மெண்ட் தாசில்தார் S.R.No.244 of 1968–ல் 30.11.1968 தேதியில் பிறப்பித்த உத்தரவு படி தாவா சொத்தின் அனுபவஸ்தர்களான பிரதிவாதிகளுக்கு ரயத்துவாரி பட்டா அளிக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்பிறகு தாவா சொத்தினைப் பொறுத்து பதிவு ஆவணங்களும், வரிவிதிப்புகளும் பிரதிவாதிகள் மற்றும் அவர்தம் முன்னோர் பெயர்களின் ஏற்பட்டு வாதி திருக்கோவிலுக்கு தெரியவே ஏறக்குறைய 100 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து எந்தவித இடையூறுமின்றி அனுபவம் செய்து வந்துள்ளனர் என்பது குறித்து வாதி தரப்பில் மறுக்க இயலாது ஏனெனில் அவையாவும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பி.வா.சா.ஆ.1 முதல் 125 வரையிலான ஆவணங்கள் மூலம் நிருபணம் செய்யப்பட்டுள்ளது.

iv) மேலும் மேற்படி சட்டமானது 1959 ஆண்டில் நடைமுறைக்கு வருவதற்கு முன்னரே பிரதிவாதிகளின் முன்னோர் 1901 ஆண்டிலிருந்தே பதிவு ஆவணம் மூலம் தாவாசொத்தின் உரிமைமூலத்தை பெற்று 100 ஆண்டுகளுக்கும் மேலாகவே வாதி திருக்கோயிலுக்கு தெரியவே எந்தவித இடையூறுமின்றி தொடர்ச்சியாக சட்டகாலத்திற்கு மேலாகவே அனுபவம் செய்து வரும் நிலையில் மேற்கடி சட்டப்பிரிவானது தாவா நிலங்களுக்கு பொருந்தாது என்ற பிரதிவாதிகள் தரப்பு வாதம் இந்த சூழ்நிலையில் ஏற்புடையது என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

v) இந்நிலையில் **Sri Arulmighu Subramaniaswamy vs K.Subramanian, SA No.2137 of 2001 dated 29.04.2015** Our Honble High Court held that "18.Excluding the applicability

of section 109 of HR&CE Act and Article 59 and Section 10 of the Limitation Act, the period of limitation applicable to the present suit filed for declaration and recovery of possession is 12 years as per Article 65. Both the courts below have rightly held that as on the date of issuance of grant of ryotwari patta in favour of the deceased first defendant in 1973, her possession of the suit property became adverse to the right claimed by the temple, the first defendant on the strength of her open, continuous and uninterrupted possession adverse to the knowledge of all including the temple, acquired prescriptive title and the right, title or interest of the temple if any is lost and the suit claiming title if any, ought to have been filed within 12 years from 1973, as such, the suit filed in 1990 is beyond the statutory period and the same is rightly held as barred by limitation and this court finds no reason to interfere with such finding rendered by the courts below and the second substantial question of law is accordingly decided against the appellant/plaintiff" **என்ற தீர்நிலையில் சொல்லப்பட்டவாறு இவ்வழக்கானது தாவாசொத்தைப் பொறுத்து சுவாதீன பரிகாரத்துடன் விளம்புகை பரிகாரமும் கோரி தாக்கல் செய்யப்பட்ட நிலையில் கோபிச்செட்டிபாளையம், இனாம் செட்டில்மெண்ட் தாசில்தார் S.R.No.244 of 1968–ல் உத்தரவு பிறப்பித்த 30.11.1968 தேதியிலிருந்து 12 ஆண்டுகளுக்குள் இவ்வழக்கை தாக்கல் செய்யாத நிலையில் இவ்வழக்கானது காலவரைச் சட்டம், பிரிவு 65–ன்படி முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. அதுவகையில் வாதிகள் விளம்புகை பரிகாரம் மற்றும் சுவாதீனப் பரிகாரம் கோரி தாக்கல் செய்த இவ்வழக்கு சட்டநிலையில் நிலைக்கத்தக்கதல்ல என்றும், அதுவகையில் வழக்கு தள்ளுபடிக்குரியது என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. அவ்வாறே சீரமைக்கப்பட்ட எழுவினா 5-க்கு வாதிக்கு எதிராகவே விடை காணப்படுகிறது.**

**ஈ. <u>விளம்புகைப் பரிகாரம்</u> : –**

i) அனைத்து வழக்குகளிலும் வாதி தரப்பில் "தாவா சொத்தானது அருள்மிகு முட்டம் நாகேஸ்வரசுவாமி திருக்கோவிலுக்கு பாத்தியப்பட்டது, மேற்படி திருக்கோவில் தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ளது, அதனை நிர்வாக அலுவலர் நிர்வாகம் செய்து வருகிறார், முன் காலத்தில் கோவில் நிர்வாகத்தை அப்போதைய உள்ளூர் மக்கள் மற்றும் நியமிக்கப்பட்ட அறங்காவலர்கள் செய்து வந்தனர், தாவா சொத்து முழுவதும் கோவிலுக்கு தேவதாய இனாமாக கொடுக்கப்பட்டிருப்பினும், அதனை பல்வேறு காலக்கட்டங்களில் சொத்தானது ஆக்கிரமிப்பாளர்களால் கையாளப்பட்டு வந்தது, சொத்தின் ஆக்கிரமிப்பாளர்கள் பல்வேறு காலகட்டங்களில் சொத்தினை

அடமானம், குத்தகை மற்றும் விற்பனைக்கு உட்படுத்தியிருந்தார்கள், அந்த சமயத்தில் மைனர் இனாம் ஒழிப்புச்சட்டம் 1963–ல் அமுலுக்கு வந்தது, அந்த சட்டத்தில் சொல்லப்பட்ட விதிகளின்படி மைனர் இனாம்கள் ஒழிக்கப்பட்டு இனாம் நிலத்தில் முறையான ஆக்கிரமிப்பாளர்கள், அனுபவதாரர்களுக்கு ரயத்துவாரி பட்டா வழங்கப்பட்டது, தாவா கோவிலுக்கு சொந்தமான 50.50 ஏக்கரைப் பொறுத்து ரயத்துவாரி பட்டா பெற யாருக்கு தகுதியுள்ளது என்பது குறித்து தீர்மானிக்க கோபிச்செட்டிப்பாளையம் நாலாவது செட்டில்மெண்ட் தாசில்தார் உரிய அதிகாரியாவார், மேற்படி செட்டில்மெண்ட் தாசில்தார் அப்போதைய ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் அனுபவஸ்தர்களுக்கு அவர்களுடைய பல்வேறு கோரிக்கைகளின் அடிப்படையில் ரயத்துவாரி பட்டா வழங்க உத்தரவிட்டார், மேற்படி செட்டில்மெண்ட் தாசில்தார் மேற்படி சட்டப்பிரிவு 8(2)(i)(b)–ன்படி 30.11.1968–ல் S.R.244/1968–ல் நில ஆக்கிரமிப்பாளர்களுக்கு ரயத்துவாரி பட்டா வழங்கினார், மேற்படி செட்டில்மெண்ட் தாசில்தாரின் உத்தரவுபடி நில ஆக்கிரமிப்பாளர்கள் மேற்படி சரத்துக்களின்படி ஆக்கிரமிப்பு நிலத்தின் நியாய வாடகை மற்றும் நில வருவாய் ஆகியவற்றிற்கிடையேயான வித்தியாச தொகையில் 20 மடங்கை செலுத்தினால் மட்டுமே ரயத்துவாரி பட்டா பெற முடியும், அவ்வாறு மேற்படி வித்தியாசத் தொகையை ஆக்கிரமிப்பாளர்கள் செலுத்தத் தவறினால் மேற்படி சட்டப் பிரிவு 8(2)(ii) –ன்படி வாதி கோவிலே ரயத்துவாரி பட்டா பெற தகுதியானது, மேற்படி செட்டில்மெண்ட் தாசில்தான் SR.No.244/1968–ல் பிறப்பித்தத உத்தரவை எதிர்த்து, அதன் எதிர்மனுதாரர்கள் கோவை இனாம் தீர்ப்பாயத்தில் CMA.No.188/1969 தாக்கல் செய்தனர், மேற்படி இனாம் தீர்ப்பாயம் செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவை ரத்து செய்து மனுவை கோபிச்செட்டிப்பாளையம் தாசில்தாருக்கே மீண்டும் விசாரித்து உத்தரவு வழங்க மீட்டனுப்புகை செய்து அனுப்பியது, மேற்படி இனாம் தீர்ப்பாயத்தின் உத்தரவை எதிர்த்து ஆக்கிரமிப்பாளர்கள் மேதகு சென்னை உயர்நீதிமன்றததில் இனாம் தீர்ப்பாயத்தில் STA.No.48/1972 தாக்கல் செய்தனர், அதில் மேதகு சென்னை உயர்நீதிமன்றம் இனாம் மேல்முறையீடு தீர்ப்பாயம் CMA 188/1969–ல் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து கோபிச்செட்டிப்பாளையம் செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவை உறுதி செய்தது, ஆக செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவு இறுதியாகி விட்டது, மேற்படி செட்டில்மெண்ட் தாசில்தார் பிறப்பித்த உத்தரவில் சொல்லப்பட்ட நிபந்தனையின்படி நில ஆக்கிரமிப்பாளர்கள் கோவை வட்டாட்சியர் நிர்ணயம் செய்யும் தொகையை செலுத்த வேண்டும், ஆனால் 1978

முதல் நில ஆக்கிரமிப்பாளர்கள் மேற்படி செட்டில்மெண்ட் தாசில்தார் அவர்களின் நிபந்தனை உத்தரவை பூர்த்தி செய்யவில்லை, ஆனால் அதனை விடுத்து நில ஆக்கிரமிப்பாளர்கள் தாங்கள் நில உரிமையாளர்கள் என்பதுபோல் இனாம் சொத்தினை விற்கவும், பல்வேறு வில்லங்களிலும் ஈடுபட்டனர், அத்தகைய நடவடிக்கை ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல மற்றும் செல்லாது, பிரதிவாதிகள் தற்போதைய நில அனுபவதாரர்கள் மற்றும் ஆக்கிரமிப்பாளர்கள் ஆவர், மேற்படி செட்டில்மெண்ட் நடவடிக்கையின் போது தாவா சொத்தின் அனுபவமானது அழகப்ப கவுண்டர் மகன் குழந்தையப்ப கவுண்டர் வசம் இருந்தது, நிபந்தனை இனாம் பட்டா குழந்தையப்ப கவுண்டர் அவர்களுக்கு அளிக்கப்பட்டது, அவர் இறப்பிற்குப் பின்பு நிபந்தனை உத்தரவு பூர்த்தி செய்யப்படவில்லை, குழந்தையப்ப கவுண்டர் இறப்பிற்குப்பின்பு அவருடைய சட்டமுறை வாரிசுகள் சொத்தினை 28.11.2011-ல் பாகம் செய்துள்ளார்கள், அதுமுதல் சொத்தில் பிரதிவாதிகள் அனுபவத்தில் உள்ளார்கள், **பிரதிவாதிகளின் தந்தை இனாம் செட்டில்மெண்ட் தாசில்தார் அவர்களின் நிபந்தனை உத்தரவை பூர்த்தி செய்யவில்லை, எனவே தாவா சொத்தில் மேற்படியாருக்கு எந்தவித சட்டப்பூர்வமான உரிமைமூலம் இல்லை, எனவே பிரதிவாதிகளுக்கும் தாவா சொத்தில் சட்டப்பூர்வமான உரிமைமூலம் இல்லை, அவர்கள் வெறும் ஆக்கிரமிப்பாளர்களே, தாவா சொத்தின் முழு சுவாந்தார் வாதி திருக்கோவிலே,** எனவே வாதி திருக்கோவில் பிரதிவாதிகளுக்கு 20.06.2017-ல் தாவா சொத்தின் சுவாதீனத்தை கோவில் வசம் ஒப்படைக்குமாறு அறிவிப்பு அனுப்பியது, அதற்கு பிரதிவாதிகள் எந்த பதிலும் அனுப்பவில்லை, சொத்தின் சுவாதீனத்தை வாதி கோவில் வசம் ஒப்படைக்கவில்லை, எனவே தாவா சொத்தில் வாதி திருக்கோவிலுக்கே உரிமைமூலம் உள்ளது என விளம்புகை செய்யவும், தாவா சொத்தின் சுவாதீனத்தில் பிரதிவாதிகள் வாதி திருக்கோவில் வசம் ஒப்படைக்கவும் இவ்வழக்கு தாக்கல், வாதி திருக்கோவில் சமயம் சார்ந்த நிறுவனம் என்பதால் இந்து சமய அறநிலையத்துறை சட்டம், 1959 பிரிவு 109-ன் கீழ் காலவரையறை சட்டத்திலிருந்து விலக்கு பெற்றுள்ளது, எனவே இந்த வழக்கு காலவரையறையால் பாதிக்கப்படவில்லை" என கட்சி செய்யப்பட்டுள்ளது.

ii) அனைத்து வழக்குகளிலும் பிரதிவாதிகள் தரப்பில் சொல்லப்பட்ட பொதுவான மறுப்புகள் பின்வருமாறு "பிராதில் சொல்லப்பட்ட அனைத்து சங்கதிகளும் தவறு,

கோவிலின் நிர்வாக அலுவலர் கோவிலுக்காக இவ்வழக்குகளை தாக்கல் செய்ய அருகதை இல்லை என்பதால் வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல, ஆக்கிரமிப்பாளர்கள் மறுபயனை செலுத்த தவறியதால் மைனர் இனாம் ஒழிப்பு சட்டம், பிரிவு 8(2)(ii)–ன் படி வாதி திருக்கோவில் ரயத்துவாரி பட்டா பெறத்தக்கது என்று சொல்லியுள்ளது தவறு, 2–ம் பிரதிவாதி தகப்பனார் குழந்தையப்ப கவுண்டர் முத்துசுவாமி என்பவரிடமிருந்து தாவா சொத்தை கிரையம் பெற்றார், அதுமுதல் எந்தவித இடையூறுமின்றி சொத்தினை அனுபவம் செய்து வந்தார், 1901–ம் ஆண்டு முதல் முன் சுவாந்தார்கள் தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்து வந்தார்கள், 100 ஆண்டுகளுக்கு முன்பே வாதி திருக்கோவில் சொத்தின் சுவாதீனத்தை விட்டுவிட்டது, இதற்கிடையில் மைனர் இனாம் ஒழிப்பு சட்டம் 1963–ல் நடைமுறைக்கு வந்தது, மேற்படி சட்ட சரத்துக்களின்படி கோபிசெட்டிப்பாளையம் 4–வது செட்டில்மெண்ட் தாசில்தார் தன்னிட்சையாக தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்களைப் பொறுத்து யார் பட்டா பெற தகுதியானவர் என்பதை முடிவு செய்ய நிலத்தில் பாத்தியமுள்ளவர்களுக்கு உரிய அறிவிப்பு கொடுத்து விசாரணை மேற்கொண்டார், உரிய விசாரணைக்குப் பிறகு செட்டில்மெண்ட் தாசில்தார் அவர்கள் SR.No.244/1968–ன்படி 30.11.1968–ல் தாவா சொத்தைப் பொறுத்து மைனர் இனாம் ஒழிப்பு சட்டம், பிரிவு 8(2)(i)(b)–ன் படி மேற்படி குழந்தையப்ப கவுண்டர் அவர்கள் கோவை, வட்டாட்சியர் நிர்ணயம் செய்யும் நியாய வாடகை மற்றும் சொத்தின் நில வருவாய் ஆகிய இரண்டிற்கும் இடையேயான வித்தியாசத்தொகையில் 20 மடங்கை மறுபயனாக அரசுக்கு செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் ரயத்துவாரி பட்டா வழங்க உத்தரவிட்டார், எனவே அந்த உத்தரவின்படி அரசுக்கே உரிய தரப்பினர்களுக்கு அறிவிப்பு கொடுத்து மறுபயனை நிர்ணயம் செய்ய வேண்டிய கடப்பாடு உண்டு, ஆனால் கோவை, வட்டாட்சியர் அவர்கள் செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவுபடி தாவா சொத்து மற்றும் இதர சொத்திற்குண்டான நியாய வாடகையை நிர்ணயம் செய்யும் சட்ட கடமையை செய்ய தவறிவிட்டார், பிரதிவாதிக்கு தெரிந்த வரை கோவை, வட்டாட்சியர் அவர்கள் ஒருபோதும் நியாய வாடகை நிர்ணயம் செய்யவோ அல்லது உரிய மறுபயனை கோரியோ எந்த அறிவிப்பும் குழந்தையப்ப கவுண்டர் உயிர்காலத்தில் அவருக்கோ, அவரது இறப்பிற்குப்பின்பு அவரது சட்டமுறை வாரிசுகளான பிரதிவாதிகளுக்கோ அனுப்பவில்லை, எனவே 2–ம் பிரதிவாதியின் தந்தை குழந்தையப்ப கவுண்டர் செட்டில்மெண்ட் தாசில்தார் 30.11.1968–ல் பிறப்பித்த நிபந்தனை உத்தரவை

கடைபிடிக்காமல் தவறி விட்டார் என சொல்ல இயலாது, மேற்படி குழந்தையப்ப கவுண்டர் இறந்த பிறகு அவருடைய சட்டமுறை வாரிசுகள் உரிய மறுபயனை நிர்ணயம் செய்யும் பட்சத்தில், கோரும்பட்சத்தில் எப்போதும் அரசிற்கு தயாராக உள்ளனர், கோவை, வட்டாட்சியர் அவர்களின் வேண்டுமென்ற கவனக் குறைவினால்தான் மறுபயனானது தற்போது வரை செலுத்தப்படாமல் உள்ளது, அதற்கு குழந்தையப்ப கவுண்டரோ அவரது சட்டமுறை வாரிசுகளான பிரதிவாதிகளோ காரணமில்லை, குழந்தையப்ப கவுண்டருக்கு செட்டில்மெண்ட் தாசில்தார் வழங்கிய பட்டா இறுதிநிலையடைந்துவிட்டது, அவரால் வழங்கப்பட்ட ரயத்துவாரி பட்டா எந்த அதிகாரியாலும் தமிழ்நாடு மைனர் இனாம் ஒழிப்பு சட்டப்படி ரத்து செய்யப்படவில்லை, குழந்தையப்ப கவுண்டருக்கு வழங்கப்பட்ட ரயத்துவாரி பட்டா தற்போதும் செல்லும், வாதியை கட்டுப்படுத்தும், குழந்தையப்ப கவுண்டர் தாவா சொத்தை தொடர்ந்து எந்தவித இடையூறுமின்றி அனுபவம் செய்து வந்தார், அவரது இறப்பிற்குப்பின்பு 2-ம் பிரதிவாதி மற்றும் மற்ற பிரதவாதிகளும் வாரிசு என்ற முறையில் சொத்தில் 28.11.2001-ல் பாகப்பிரிவினை செய்து கொண்டோம், அதுமுதல் பிரதிவாதிகளே உண்மையான சுவாந்தார்கள் என்ற முறையில் தாவா சொத்தில் அனுபவ சுவாதீனத்தில் உள்ளார்கள், தமிழ்நாடு மைனர் இனாம் ஒழிப்பு சட்டம், 1963 பிரிவுகள் 3(a), 3(b) ஆகியவை அமுலுக்கு வந்து விட்டதில் இனாம் சொத்துக்கள் முடிவிற்கு வந்து அனைத்து இனாம் நிலங்களும் அரசிற்கு வில்லங்க சுத்தியில் பரிமாற்றம் செய்யப்பட்டுவிட்டது, எனவே வாதிக்கு தாவா சொத்தில் எந்தவித முன்இருப்பு உரிமை ஏதுமில்லை, எனவே வாதி திருக்கோவில் அதற்கு அளிக்கப்பட்டதாக கூறும் இனாம் அடிப்படையில் தாவா சொத்தில் எந்தவித உரிமைமூலம், அனுபவ சுவாதீனத்தை கோர இயலாது ஏனெனில் மேற்படி சட்டம் அமுலுக்கு வந்த பிறகு அனைத்து இனாம்களும் ஒழிக்கப்பட்டு விட்டன, வாதி திருக்கோவில் தவறான யூகத்தின் அடிப்படையில் இந்த வழக்கை விளம்புகை மற்றும் சுவாதீனமீட்பு பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளது, மேற்படி கோவை, வட்டாட்சியர் தாவா சொத்தில் உரிமையுள்ள அனைத்து தரப்பினர்களுக்கும் உரிய முன்னறிவிப்பு கொடுத்து நியாய வாடகை நிர்ணயம் செய்திருக்க வேண்டும், அதன்பிறகு தாவா சொத்திற்குண்டான மறுபயனை நிர்ணயம் செய்து பின்பு அதனை செலுத்துமாறு ரயத்துவாரி பட்டா பெற்றவர்களுக்கு கேட்பு அறிவிப்பு அனுப்ப வேண்டும், ஆனால் அவைகளையெல்லாம் வட்டாட்சியர் செய்யத் தவறிவிட்டார், அவர்களுடைய தவறுகைக்கு பிரதிவாதிகளும்

அவர்களது முன்னோர்களும் பொறுப்பாக மாட்டார்கள், **தாவா சொத்திற்கான நியாய வாடகை நிர்ணயம் மற்றும் மறுபயன் செலுத்துதல் ஆகியவை ரயத்துவாரி பட்டா பெற்றவர்களுக்கும் அரசிற்கும் இடையேயான நடவடிக்கையே தவிர அதில் வாதி திருக்கோவிலுக்கு எந்த சம்மந்தமும் இல்லை**, வாதி கூறுவதுபோல் ரயத்துவாரி பட்டா பெற்றவர்கள் சொத்திற்கு நியாய வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு நிர்ணயிக்கும் உரிய மறுபயனை செலுத்தத் தவறினால் இனாம் ஒழிப்பு சட்டம், பிரிவு 8(3)—ன் படி அரசானது மேற்படி தொகையை வட்டியுடன் நில வருவாய் வசூலிப்பு முறையில் அதனை வசூல் செய்து கொள்ள வேண்டும், எனவே தாவா சொத்தில் வாதிக்கு எந்தவித சட்டப்படியான உரிமை ஏதுமில்லை, 100 ஆண்டுகளுக்கு முன்பாகவே தாவா சொத்தின் சுவாதீனத்தில் வாதி திருக்கோவில் இருந்து வரவில்லை, அது முதல் குழந்தையப்ப கவுண்டரே சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வந்துள்ளார், செட்டில்மெண்ட் தாசில்தார் ரயத்துவாரி பட்டாவைதாவா சொத்தைப் பொறுத்து குழந்தையப்ப கவுண்டருக்கு வழங்கிய பின்னர் அதன் உண்மையான சுவாந்தார் என்ற முறையில் அவரே அனுபவம் செய்து வந்தார், இந்து சமய அறநிலையத்துறை சட்டம், பிரிவு 109 ஆனது 2003—ல் சீர்திருத்தம் செய்யப்பட்டது, அதற்கு முன்பே பிரதிவாதிகளும் அவரது முன் சுவாந்தார்களும் சட்ட காலத்திற்கு மேலாகவே தாவா சொத்தில் உரிமைமூலத்துடன் தொடர்ந்து எந்தவித இடையூறுமின்றி அனுபவத்தில் இருந்து வருகிறார்கள், எனவே சட்டப்பிரிவு 109 ஆனது வாதிக்கு எந்தவித அனுகூலத்தையும் தராது, பிரிவு 109 ஆனது சுவாதீன மீட்பு பரிகாரத்திற்கு மட்டுமே பொருந்தக்கூடியது, வாதி கோரும் விளம்புகை பரிகாரத்திற்கு பொருந்தாது, வாதி கூறியுள்ள CMA 188/1969 மற்றும் STA.No.48/1972 ஆகியவை ரயத்துவாரி பட்டா வழங்கப்பட்ட சொத்தின் விஸ்தீரணங்களின் மாறுபாடுகள் காரணமாகத்தான் தாக்கல் செய்யப்பட்டது, தாவா சொத்தில் வாதி திருக்கோவிலுக்கு எந்தவித பாத்தியமோ, உரிமையோ, உரிமைமூலமோ கிடையாது, செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவிற்குப்பிறகு ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்குப் பிறகு எந்தவித காரணமின்றி தாவா வழக்குகள் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது, எனவே வழக்குகளானது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது, நியாய வாடகையானது கோயமுத்தூர் தாசில்தார் அவர்களால் நிர்ணயம் செய்யப்படவேண்டும், தாவா சொத்திற்கான மறுபயனானது அரசுக்கு செலுத்தப்பட வேண்டும், எனவே தமிழ்நாடு அரசு வழக்கிற்கு தேவையான மற்றும் அவசியமான தரப்பினர், தமிழ்நாடு அரசை வழக்கில்

சேர்க்காததால் வழக்கு பாதிப்படைந்துள்ளது, செட்டில்மெண்ட் தாசில்தார் நடவடிக்கையில் வாதி திருக்கோவிலும் ஒரு தரப்பினர் செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவு இறுதிநிலை அடைந்து விட்டது, அந்த உத்தரவு வாதியை கட்டுப்படுத்தும், **எனவே வாதி மீண்டும் ஒரே பிரச்சனையை எழுப்ப முடியாது, எனவே செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவு இவ்வழக்கில் முன்தீர்ப்பு தடையாக செயல்படும், எனவே வழக்கானது மேற்படி மைனர் இனாம் ஒழிப்பு சட்டம், பிரிவு 43–ன் கீழ் பாதிப்படைந்துள்ளது,** சொத்தினை மதிப்பிட்டுள்ளது தவறானது, வாதி வேண்டுமென்றே சொத்தினை குறைவாக மதிப்பிட்டுள்ளார், சொத்தினை சரியாக மதிப்பிட்டிருந்தால் நீதிமன்ற பண ஆள்வரைக்கு அப்பால் சென்றுவிடும், வாதியானவர் சொத்தின் சந்தை மதிப்பிற்கு நீதிமன்ற கட்டணத்தை செலுத்தியிருக்க வேண்டும், எனவே செலுத்தப்பட்டிருக்கும் நீதிமன்ற கட்டணம் தவறானது, தாவா சொத்தினைப் பொறுத்து பிரதிவாதிகளுக்கு சரியான செல்லுபடியான உரிமைமூலம், அனுபவ சுவாதீனம் உள்ளது, பிரதிவாதிகள் ஆக்கிரமிப்புதாரர்கள் அல்ல, தாவா சொத்தின் சுவாந்தார் வாதி என சொல்லியுள்ளது தவறு, வாதி கூறுவது போல் பிரதிவாதிகளுக்கு எந்த அறிவிப்பும் அனுப்பப்படவில்லை, வழக்கிற்கு எந்தவித வழக்குமூலமும் இல்லை, சொல்லப்பட்ட வழக்குமூலம் பல வருடங்களுக்கு முன்பே காலாவதியாகிவிட்டது, கற்பனையான வழக்குமூலத்தைக் கொண்டு வாதி வழக்கை தாக்கல் செய்துள்ளார், வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்" என குறிப்பான மறுப்புகள் சொல்லப்பட்டுள்ளது.

iii) அதுகுறித்து தீர்வு காண்பதற்கு உரிய சட்டப்பிரிவுகளை விவரிப்பது அவசியமாகிறது.

**TN MINOR INAM (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) ACT:**

**Section 3 : Vesting of minor inams, etc., in Government : -**

With effect on and from the appointed day and save as otherwise expressly provided in this Act -(a) clause (b) of sub-section (1) of sub-section (2) of section 17 of the Abolition Act and clause (b) of sub-section (1) and sub-section (2) of section 14 of the Inam Estates Abolition Act, sections 2 and 12 of the [Chennai] *[Substituted for the word 'Madras' by the City of Madras (Alteration of Name) Act, 1996 (Tamil Nadu Act 28 of 1996).]* City Land Revenue Act, 1851 (Central Act XII of 1851), the Pudukkottai (Settlement of Inams) Act, 1955 [Tamil Nadu] *[Substituted for the word 'Madras' by the Tamil Nadu Adaptation of*

*Laws Order, 1969, as amended by the Tamil Nadu Adaptation of Laws (Second Amendment) Order, 1969.]* Act XXII of 1955), [section 22 of the [Tamil Nadu] *[Substituted for the expression 'and all other enactment applicable to minor inams' by section 4(i)of the Tamil Nadu Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Amendment Act, 1964 (Tamil Nadu Act 33 of 1964).]*Transferred Territory)] Incorporated and Unincorporated Devakswoms Act, 1959 [Tamil Nadu] *[Substituted for the word 'Madras' by the Tamil Nadu Adaptation of Laws Order, 1969, as amended by the Tamil Nadu Adaptation of Laws (Second Amendment) Order, 1969.]* Act 30 of 1959), clause (i) of section 3 of the [Tamil Nadu] *[Substituted for the word 'Madras' by the Tamil Nadu Adaptation of Laws Order, 1969, as amended by the Tamil Nadu Adaptation of Laws (Second Amendment) Order, 1969.]* Transferred Territory Ryotwari Settlement Act, 1964 [Tamil Nadu] *[Substituted for the word 'Madras' by the Tamil Nadu Adaptation of Laws Order, 1969, as amended by the Tamil Nadu Adaptation of Laws (Second Amendment) Order, 1969.]* Act 33 of 1964), the Service Inams Proclamation, dated the 13th May 1893, and all other enactments applicable to minor inams) as such shall be deemed to have been repealed in their application to minor inams;

(b) every minor inam including all communal lands and porambokes, waste lands, pasture lands, forests, mines and minerals, quarries, rivers and streams [tanks and ooranies (including private tanks and ooranies) and irrigation works] *[These words and brackets were substituted, and were deemed always to have been substituted, for the words 'tanks and irrigation works' by section 4(1) of the Tamil Nadu Inam Estate, Lease-holds and Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Amendment Act, 1975 (Tamil Nadu Act 2 of 1976).]*, fisheries and ferries, situated within the boundaries thereof, shall stand transferred to the Government and vest in them free of all encumbrances, and the [Chennai] *[Substituted for the word 'Madras' by the City of Madras (Alteration of Name) Act, 1996 (Tamil Nadu Act 28 of 1996).]* City Land Revenue Act, 1851 (Central Act XII of 1851) except sections 2 and 12, the [Chennai] *[Substituted for the word 'Madras' by the City of Madras (Alteration of Name) Act, 1996 (Tamil Nadu Act 28 of 1996).]* City Land Revenue Recovery Act, 1864 [Tamil Nadu] *[Substituted for the word 'Madras' by the Tamil Nadu*

*Adaptation of Laws Order, 1969, as amended by the Tamil Nadu Adaptation of Laws (Second Amendment) Order, 1969.]* Act II of 1864), the [Tamil Nadu] *[Substituted for the word 'Madras' by the Tamil Nadu Adaptation of Laws Order, 1969, as amended by the Tamil Nadu Adaptation of Laws (Second Amendment) Order, 1969.]* Revenue Recovery Act, 1864 [Tamil Nadu] *[Substituted for the word 'Madras' by the Tamil Nadu Adaptation of Laws Order, 1969, as amended by the Tamil Nadu Adaptation of Laws (Second Amendment) Order, 1969.]* Act VII of 1865), [the [Tamil Nadu] *[Substituted for the expression 'and all other enactment applicable to ryotwari lands' by section 4(ii) of the Tamil Nadu Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Amendment Act, 1964 (Tamil Nadu Act 33 of 1964).]* (Transferred Territory) Ryotwari Settlement Act, 1964 [Tamil Nadu] *[Substituted for the word 'Madras' by the Tamil Nadu Adaptation of Laws Order, 1969, as amended by the Tamil Nadu Adaptation of Laws (Second Amendment) Order, 1969.]* Act 33 of 1964), and all other exactments applicable to ryotwari lands] shall apply to the minor inam;

(c) all rights and interests created by the inamdar in or over his inam before the appointed day, shall, as against the Government, cease and determine;

(d) the Government may, after removing any obstruction that may be offered, forthwith take possession of the minor inam and all accounts, registers, pattas, muchilikas, maps, plans and other documents relating to the minor inam which the Government may require for the administration thereof:[Provided that the Government shall not disposes any person who is personally cultivating any land in the minor inam, until the Assistant Settlement Officer and the Tribunal and the Special Appellate Tribunal, on appeal, if any, decide that such person is not actually entitled to a ryotwari patta in respect of that land under the provisions of this Act:] [[Substituted for the following proviso by section 2 of the Tamil Nadu Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Amendment Act, 1971 (Tamil Nadu Act 29 of 1971), which was deemed to have come into force on the 15th February 1965 :-Provided that the Government shall not dispossess any person of any land in the minor inam in respect of which they consider that he is prima facie entitled to a ryotwari patta pending the decision of the appropriate authority under this Act as to whether such person is entitled to such patta.]]Explanation. - For the purposes of this proviso, a person is said to personally

cultivate land when he contributes his own physical labour that of the members of his family in the cultivation of the land;

(e) the inamdar and any other person whose rights stand transferred under clause (b) or cease and determine under clause (c) shall be entitled only to such rights and privileges as are recognised or conferred on him by or under this Act;

(f) the rights and obligations of the inamdar as such shall be extinguished;

(g) any rights and privileges which may have accrued in the minor inam to any person before the appointed day against the inamdar shall cease and determine and shall not be enforceable against the Government or against the inamdar, and every such person shall be entitled only to such rights, and privileges as are recognized or conferred on him, by or under this Act.

**<u>Section 8</u> :<u>Grand of ryotwari pattas</u> : -**

(1) Subject to the provisions of sub-section (2), every person who is lawfully entitled to the kudivaram in an inam land immediately before the appointed day whether such person is an inamdar or not shall, with effect on and from the appointed day, be entitled to ryotwari patta in respect of that hand.

(2) Notwithstanding anything contained in sub-section (1) in the [Tamil Nadu *[Substituted for the word 'Madras' by the Tamil Nadu Adaptation of Laws Order, 1969, as amended by the Tamil Nadu Adaptation of Laws (Second Amendment) Order, 1969.* Hindu Religious and Charitable Endowments Act, 1959 [Tamil Nadu] *[Substituted for the word 'Madras' by the Tamil Nadu Adaptation of Laws Order, 1969, as amended by the Tamil Nadu Adaptation of Laws (Second Amendment) Order, 1969.]* Act 22 of 1959), [and in the [Tamil Nadu] *[Inserted by section 7 of the Tamil Nadu Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Amendment Act, 1964 (Tamil Nadu Act 33 of 1964).]* (Transferred Territory)] Incorporated and Unincorporated Devaswoms Act, 1959 [Tamil Nadu] *[Substituted for the word 'Madras' by the Tamil Nadu Adaptation of Laws Order, 1969, as amended by the Tamil Nadu Adaptation of Laws (Second Amendment) Order, 1969.]* Act 30 of 1959), the following provisions shall apply in the case of lands in an iruvaram minor inam granted for

the support or maintenance of a religious institutions or for the performance of a charity or service connected therewith or of any other religious charity - (i) where the land has been transferred by way of sale and the transferee or his heir, assignee, legal representative or person deriving rights through him had been in exclusive possession a such land – (a) for a continuous period of **sixty years immediately before the 1st day of April 1960**, such person shall, with effect on and from the appointed day, be entitled to a ryotwari patta in respect of that land; (b) for a continuous period of **twelve years immediately before the 1st day of April 1960,** such person shall, with effect on and from the appointed day, be entitled to a ryotwari patta **if he pays as consideration to the Government** in such manner and in such number of installments as may be prescribed an amount equal to **twenty times the difference between the fair rent in respect of such land determined in accordance with the provisions contained in the Schedule and the land revenue due on such land**;

(ii) in the case of any other land, the institution or the individual rendering service shall, with effect on and from the appointed day, be entitled to a ryotwari patta in respect of that land.

Explanation. - For the purpose of this sub-section, "land revenue" means the ryotwari assessment including the additional assessment, water-cess and additional water-cess.

**(3) Any arrear of the amount due from any person under clause (i)(b) of subsection (2) shall be recovered together with such interest as may be prescribed as if it were an arrear of land revenue.**

(4) The Government shall [within such period as may be prescribed] *[Substituted for the words 'within one year from the appointed day' by section 2 of the Tamil Nadu Inam (Abolition and Conversion into Ryotwari) Amendment Act, 1966 (Tamil Nadu Act 26 of 1966).]*, pay to the institution concerned in one lump sum the amount specified in clause (i)(b) of sub-section (2) and such payment shall be made in such form and manner as may be prescribed.

(5) In the case of a minor inam held immediately before the appointed day by an individual on condition of rendering service to a religious, educational or charitable institution, the

grant of ryotwari patta under sub-section (1) or (2) shall be subject to the provisions of section 21.

**<u>Section 21</u>: <u>Service inams</u> : -**

(1) The provisions of this section shall apply in respect of any minor inam which was held immediately before the appointed day by an individual (hereinafter referred to in this section as the service-holder) on condition of rendering service to a religious, educational or charitable institution.

(2) The service-holder shall, subject to the provisions of sub-section (3), be bound to continue to render the service after the appointed day.

(3) (i) Where a service-holder is entitled to a ryotwari patta under section 8 in respect of any land, he shall have the option – (a) either to pay to the religious institution the amount specified in subsection

(4) and on such payment the land shall, notwithstanding anything contained in sub-section (7), be discharged from the condition of the service; or (b) to hold the land and continue to render service subject to the provisions contained in sub-sections (1), (2), (6) and (7).

(ii) The option referred to in clause (i) shall be twenty times the difference between the fair rent in respect of such land determined in accordance with the provisions contained in the Schedule and the land revenue due on such land.

(5) Where the service-holder has exercised his option to pay the amount specified in sub-section (4), the tasdik allowance referred to in sub-section (6) in respect of the period subsequent to the date of the exercise of such option shall be the absolute property of the institution and the institution shall be at liberty to make such arrangements as it thinks fit for the performance of the service.

(6) (a) For so long as the service-holder renders the service, the institution shall pay to the service-holder the tasdik allowance paid by the Government under section 20. (b) If the service-holder fails to render the service, the prescribed officer shall, after such inquiry and after such notice to the service-holder as may be prescribed in this behalf, notify such failure

in such manner as may be prescribed. He shall then declare that the tasdik allowance payable to the institution in respect of the period subsequent to the failure shall be the absolute property of the institution and the institution shall be at liberty to make such arrangement as it thinks fit for the performance of the service.

(7) (a) For so long as the service-holder renders the service, he shall be entitled to occupy permanently the lands in respect of which he is entitled to a patta under section 8, subject however, to the payment of the assessment fixed [under section 16 or under section 16-A, as the case may be] *[Substituted for the expression 'under section 16' by section 13 of the Tamil Nadu Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Amendment Act, 1964 (Tamil Nadu Act 33 of 1964).]*, in respect of such lands. (b) If the service-holder fails to render the service, **the prescribed officer** shall, after such inquiry and after such notice to the service-holder as may be prescribed in this behalf, notify such failure in such manner as may be prescribed. He shall then declare that the service-holder's right to occupy permanently the land under clause (a) shall cease and determine, and the institution shall be at liberty to make such arrangement as it thinks fit for the performance of the service and shall be entitled to hold the land as its absolute property subject, however, **to the payment of the assessment fixed therefor** [under section 16 or under section 16-A, as the case may be] *[Substituted for the expression 'under section 16' by section 13 of the Tamil Nadu Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Amendment Act, 1964 (Tamil Nadu Act 33 of 1964).]*.

Explanation I. - For the purposes of this section, - (i) service-holder includes his heirs;

(ii) non-performance of the service due to illness or other temporary disability shall not be deemed to be failure to render service, provided that the service-holder makes alternative arrangements for rendering the service during the period of such illness or of other temporary disability.

Explanation II. - For the purposes of sub-section (4), "land revenue" means the ryotwari assessment including the additional assessment, water-cess and additional water-cess.

**iv) ஆக வழக்குரைச் சங்கதிகளின்படியே தாவா சொத்து முழுவதும் கோவிலுக்கு தேவதாய இனாமாக** கொடுக்கப்பட்டிருப்பினும், அதனை பல்வேறு

காலக்கட்டங்களில் சொத்தானது ஆக்கிரமிப்பாளர்களால் கையாளப்பட்டு வந்தது, சொத்தின் ஆக்கிரமிப்பாளர்கள் பல்வேறு காலகட்டங்களில் சொத்தினை அடமானம், குத்தகை மற்றும் விற்பனைக்கு உட்படுத்தியிருந்தார்கள், அச்சமயத்தில் மைனர் இனாம் ஒழிப்புச்சட்டம் 1963–ல் அமுலுக்கு வந்தது, அச்சட்டத்தில் சொல்லப்பட்ட விதிகளின்படி மைனர் இனாம்கள் ஒழிக்கப்பட்டு இனாம் நிலத்தில் முறையான ஆக்கிரமிப்பாளர்கள், அனுபவதாரர்களுக்கு ரயத்துவாரி பட்டா வழங்கப்பட்டது என வாதியே பிராதில் ஒப்புக் கொண்டுள்ளார்.

v) தாவா சொத்துக்கள் கோவை மாவட்டம், கோவை தெற்கு வட்டம், இக்கரை போளூம்பட்டி கிராமம், க.ச.எண்.426/1–ல் உள்ளதாக வாதி தரப்பில் அனைத்து பிராதுகளிலும் விவரிக்கப்பட்டுள்ளது.

vi) வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட RE–SURVEY AND RE–SETTLEMENT REGISTER/வா.சா.ஆ.1–ஐ இந்நீதிமன்றம் முழுமையாக அதில் பக்கம் 18–ல் புல எண்.425 – 0,95 ஏக்கரைப் பொறுத்து மட்டுமே **"நாகேஸ்வரஸ்வாமி கோவில்"** எனவும், புல எண்.426/1–ஐ பொறுத்து 30.95 ஏக்கர் விஸ்தீரணத்திற்கு யார் பெயரில் ஏற்பட்டது என பதிவு காணப்படவில்லை என்பதனையும், புல எண்.426/2 ஆனது 1.81 ஏக்கர் விஸ்தீரணத்திற்கு **"வாய்க்கால்"** எனவும், புல எண்.426/3–ஐ பொறுத்து 18.94 ஏக்கர் விஸ்தீரணத்திற்கும், புல எண்.426/4–ஐ பொறுத்து 0.61 ஏக்கர் விஸ்தீரணத்திற்கும் **"யார் பெயரில் ஏற்பட்டது என பதிவு காணப்படவில்லை"** என்பதனையும் அறிய முடிகிறது.

vii) வா.சா.ஆ.2/செட்டில்மெண்ட் தாசில்தார், கோபிச்செட்டிப்பாளையம் அவர்கள் **S.R.No.244/68/M.I.Act/Coimbatore TK-ல்** 30.11.2018–ல் பிறப்பித்த உத்தரவை இந்நீதிமன்றம் முழுமையாகப் பரிசீலிக்கையில் மேற்படி தன்னிச்சையான விசாரணையானது மைனர் இனாம் ஒழிப்புச் சட்டம், பிரிவு 11–ன் கீழ் செட்டில்மெண்ட் தாசில்தார், கோபிச்செட்டிப்பாளையம் அவர்களால் நில அனுபவஸ்தர்களிடம் மேற்கோள்ளப்பட்டு பின்வருமாறு உத்தரவு பகரப்பட்டுள்ளது **" I therefore direct that ryotwari patta in respect od the lands specified in the schedule below be allowed to the persons noted therein under Section 8(2)(i)(b) read with Section 11 of the Madras Minor Inams(Abolition and Conversion into Ryotwari) Act, 1963 subject to the conditions that they pay as consideration to the Government a sum equal to 20 times the difference between the fair rent to be fixed by the Tasildhar, Coimbatore and the land revenue due on the land when demanded".**

மேலும் அந்த உத்தரவிலேயே மேற்படி விசாரணை நடவடிக்கையானது புல எண்.426/1, 426/3 முதல் 426/10-ல் கட்டுப்பட்ட பூமிகளைப் பொறுத்து நடைபெற்றுள்ளது என்பதும், அதில் விவரிக்கப்பட்ட அட்டவணை என்ற பத்தியில் யார் யார் எந்தெந்த பூமிகளை அனுபவம் செய்து வருகிறார்கள் என்பதும், அவர்கள் அனைவருக்கும் மேற்படி நிபந்தனைகளின் அடிப்படையில் ரயத்துவாரி பட்ட வழங்க உத்தரவிட்டுள்ளதையும் அறிய முடிகிறது. இதுதவிர மேற்படி உத்தரவில் விவரிக்கப்பட்டுள்ள பூமிகள் தேவதாய இனாம் பூமிகள் என்றும், இனாம் ஒழிப்புச் சட்டம் அமுலுக்கு வந்தவுடன் அனைத்து பூமிகளும் இனாம் ஒழிப்புச் சட்டம், பிரிவு 3(b)–ன்படி அரசுக்கு எந்தவித வில்லங்கமின்றி சேரும் என குறிப்பாக சொல்லப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

viii) அது குறித்து வா.சா.1 தனது சாட்சியத்தில் பின்வருமாறு ஒப்புக் கொண்டுள்ளார் "தாவா சொத்துக்கள் ஆதியில் மன்னர்களால் திருக்கோயிலுக்கு இனாமாக வழங்கப்பட்டது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன், உரிமைமூல ஆவணம் எண்.232 என்பதை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், தாவா சொத்துக்கள் திருக்கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கான ஒரே ஆவணம் நான் தாக்கல் செய்துள்ள இனாம் பதிவேடு என்றால் சரிதான், தாவா சொத்துக்கள் சம்பந்தமாக ஏற்பட்டதாக சொன்ன இனாம் ஒழிப்புச் சட்டம் 30–1963 ஆனது 15.02.1965 முதல் அமுல்படுத்தப்பட்டது என்றால் சரிதான், மேற்படி சட்டத்தில் இந்த சொத்துக்கள் எல்லாம் 15.02.1965 முதல் சர்வ வில்லங்க சுத்தமாக அரசு கட்டுப்பாடிற்கு வந்து விட்டது என்றால் சரிதான்".

ix) வா.சா.ஆ.3/மேதகு சென்னை உயர்நீதிமன்றம் S.T.Appeal No.48/1972–ல் 20.08.1975 தேதிய உத்தரவினை இந்நீதிமன்றம் பரிசீலிக்கையில் கோவை சார்பு நீதிமன்றம்(மைனர் இனாம் தீர்ப்பாயம்) C.M.A. No.188 of 1969–ல் பிறப்பித்த 15.03.1972 தேதிய உத்தரவை ரத்து செய்து அதன் மேல்முறையீடுதாரர்கள் 13 ஏக்கர் 17 சென்ட் பட்டா பெறத்தகுதியானவர்கள் என்றும், இதர பூமிகளைப் பொறுத்து தமிழ்நாடு இனாம் ஒழிப்புச் சட்டம், பிரிவு 8(2)–ன்படி அவர்களுக்கு பட்டா கோர உரிமையில்லை என்றும் தீர்ப்பளித்துள்ளதை அறிய முடிகிறது. மேற்படி வா.சா.ஆ.3 உத்தரவை எதிர்த்து இரு தரப்பினர்களும் எந்தவித மேல்முறையீடும் செய்து கொள்ளாத நிலையில் அந்த உத்தரவு இறுதிநிலை அடைந்து விட்டதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி வா.சா.ஆ.2 மற்றும்

வா.சா.ஆ.3 ஆகிய இரு உத்தரவுகளிலும் புல எண்கள்.426/1, 426/3 முதல் 426/10–ல் கண்ட பூமிகளில் பிரதிவாதிகளின் முன்னோர்கள் 1901 முதல் அனுபவ சுவாதீனத்தில் இருந்து வந்துள்ளனர் என்பதனை உறுதி செய்துள்ளதை அறிய முடிகிறது.

x) மேலும் **பிரதிவாதிகளின் முன்னோர்களுக்கு/முன்சுவான்தார்களுக்கு** கோபிச்செட்டிபாளையம், இனாம் செட்டில்மெண்ட் தாசில்தார் அவர்களின் 30.11.1968 தேதிய உத்தரவுபடி நிபந்தனையின் அடிப்படையில் வழங்கப்பட்ட ரயத்துவாரி பட்டாவை ரத்து செய்ய வாதி திருக்கோவில் எந்த மேல்முறையீட்டு தீர்ப்பாயத்திலோ அல்லது இனாம் ஒழிப்பு சட்டம், பிரிவு 30–ன்படி எந்தவொரு நடடிக்கையோ மேற்கொண்டதாக கட்சி செய்யவில்லை.

xi) அவ்வாறு வாதி தரப்பில் சொல்லியுள்ளது போல் பிரதிவாதிகளின் முன்னோர் மேற்படி கோபிச்செட்டிபாளையம், இனாம் செட்டில்மெண்ட் தாசில்தார் அவர்களின் நடவடிக்கையின் தரப்பினர்கள் அதில் பிறப்பிக்கப்பட்ட 30.11.1968 தேதிய உத்தரவுத்தில் சொல்லியுள்ளது போல் நிபந்தனைகளை கடைபிடிக்கவில்லை எனில் தன்னிச்சையாக ரயத்துவாரி பட்டா ரத்தாகிவிடும் என மேற்படி இனாம் ஒழிப்பு சட்டத்தில் எந்தப்பிரிவுகளிலும் சொல்லப்படவில்லை. ஆனால் அதேவேளையில் சொத்தின் அனுபவஸ்தர்கள் பிரிவு 8(2)(i)(b)–ன்படி நிபந்தனை உத்தரவினை நிறைவு செய்யவில்லையெனில் சட்டம், 30/1963 பிரிவு 8(3)–ன்படி அத்தகைய நிலுவைத்துகையை அந்நபர்களிடமிருந்து வட்டியுடன் நில வருவாய் வசூலிப்பு முறையில் வசூல் செய்யப்பட வேண்டும் மட்டுமே சொல்லப்பட்டுள்ளது.

xii) இந்நிலையில் வாதி தரப்பில் செய்யப்பட்ட கட்சியான "பிரதிவாதிகளின் தந்தை இனாம் செட்டில்மெண்ட் தாசில்தார் அவர்களின் நிபந்தனை உத்தரவை பூர்த்தி செய்யவில்லை, எனவே தாவா சொத்தில் மேற்படியாருக்கு எந்தவித சட்டப்பூர்வமான உரிமைமூலம் இல்லை, எனவே பிரதிவாதிகளுக்கும் தாவா சொத்தில் சட்டப்பூர்வமான உரிமைமூலம் இல்லை, அவர்கள் வெறும் ஆக்கிரமிப்பாளர்களே, தாவா சொத்தின் முழு சுவாந்தார் வாதி திருக்கோவிலே" என்ற வாதி தரப்பு கட்சியும், வாதமும் இந்த சூழ்நிலையில் ஏற்புடையதல்ல என்றும், அவையாவும் முழுமையாக நிராகரிக்கத்தக்கது என்றே இந்நீதிமன்றம்

தீர்மானிக்கிறது. **அவ்வாறே சீரமைக்கப்பட்ட எழுவினா 6–க்கு வாதிக்கு எதிராகவே விடை காணப்படுகிறது.**

xiii) உள்ளபடி கோபிச்செட்டிபாளையம், இனாம் செட்டில்மெண்ட் தாசில்தார் அவர்கள் **S.R.No.244/68/M.I.Act/Coimbatore TK**-ல் 30.11.2018–ல் பிறப்பித்த பின்வரும் உத்தரவை இந்நீதிமன்றம் முழுமையாகப் பரிசீலிக்கையில் "I therefore direct that ryotwari patta in respect od the lands specified in the schedule below be allowed to the persons noted therein under Section 8(2)(i)(b) read with Section 11 of the Madras Minor Inams(Abolition and Conversion into Ryotwari) Act, 1963 subject to the conditions that they pay as consideration to the Government a sum equal to 20 times the difference between the fair rent to be fixed by the Tasildhar, Coimbatore and the land revenue due on the land when demanded" தாவா நில அனுபவதாரர்கள் கோவை வட்டாச்சியர் நிர்ணயிக்கும் நியாய வாடகையில் 20 மடங்கு மற்றும் நிலுவை நிலவருவாய் ஆகியவைகளை கோரும்போது அரசுக்கு செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் ரயாத்துவாரி பட்டா வழங்கி உத்தரவிட்டுள்ளதை அறிய முடிகிறது. அப்படியிருக்கையில் அந்த உத்தரவுபடி கோவை, வட்டாச்சியர் அவர்களே தன்னிச்சையாகவோ அல்லது நில அனுபவஸ்தர்களுக்கு அறிவிப்பு அனுப்பி, அவர்கள் தரப்பை கேட்டறிந்து நில அனுபவஸ்தர்கள் செலுத்த வேண்டிய வித்தியாசத்துகையை குறிப்பிட்ட நாட்களுக்குள் செலுத்த கோருதல் வேண்டும், அத்தகைய கோரிக்கையானது கோவை, வட்டாச்சியரிடமிருந்து வந்தபின்னர்தான் நில அனுபவஸ்தர்களும், கோபிச்செட்டிபாளையம், செட்டில்மெண்ட் தாசில்தாரால் நிபந்தனை ரயத்துவாரி பட்டா பெற்றவர்களான பிரதிவாதிகளால் **நியாயவாரத்துகையை** செலுத்தி நிபந்தனையை பூர்த்தி செய்ய இயலும்,

xiv) ஆனால் உண்மையில் அத்தகைய எந்தவொரு நடவடிக்கையும் கோவை, வட்டாச்சியரால் எடுக்கப்பட்டது என வாதியால் கட்சி செய்யப்படவில்லை. அதுகுறித்து நீதிமன்றம் அறிந்து கொள்ளும் வகையில் உரிய அரசு தரப்பினர்களையும் வாதி இவ்வழக்கில் சேர்க்கவில்லை. தாராபுரம், நிலவரித்திட்ட உதவி அலுவலர் அவர்களின் பி.வா.சா.ஆ.36–ன்படியான கடிதத்திலும் கோபிச்செட்டிபாளையம், செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவு அடங்கிய கோப்பு கோவை, முதன்மை சார்பு நீதிமன்ற CMA No.19/1986 வழக்கிற்காக 12.10.1988–ல் கொடுக்கப்பட்டுவிட்டது எனவும், வழக்கு முடிவடைந்தவுடன்

கோப்பை திருப்பி அனுப்பி விடுவதாகவும் தெரிவித்துள்ளார் எனவும், வழக்கு முடிந்தவுடன் S.R.கோப்பு மீது கோவை, முதன்மை சார்பு நீதிபதியின் தீர்ப்பு, மேதகு சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்புகளின்படி பட்டாதாரர்களின் உரிமைபடி நியாயமான விதத்தில் தக்க உத்தரவு பிறப்பிப்பது நிலுவையில் உள்ளது என தெரிவித்துள்ளதை அறிய முடிகிறது.

xv) ஆக இதுவரை கோவை, வட்டாச்சியர் அவர்களால் தாவா இனாம் நிலங்களுக்கு இனாம் ஒழிப்பு சட்டம், பிரிவு 8(2)(i)(b)–ன்படி நியாயவாரத்துகையானது நிர்ணயம் செய்யப்படவில்லை என்ற நிலையில் பிரதிவாதிகள் மேற்படி நியாயவாரத்துகையை செலுத்தத்தவறிவிட்டனர் என்பதால் மட்டும் தாவாசொத்தில் வாதி திருக்கோயிலுக்கு தன்னிச்சையான உரிமைமூலம் கிடைத்துவிட்டது என்ற கற்பனையின் அடிப்படையில் தாவாசொத்தினைப் பொறுத்து வாதி விளம்புகைப் பரிகாரம் கோரியுள்ளது சட்டநிலையில் ஏற்புடையது இல்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

xvi) மேலும் வாதியால் தாவாசொத்தினைப் பொறுத்து முன்இருப்பு உரிமை(pre–existing Right) இருந்து வந்தது என்பதற்கு வா.சா.ஆ.1 ஆவணத்தைத்தவிர எந்தவொரு ஆவணங்களும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி வா.சா.ஆ.1 அனைத்து வழக்கு சொத்துக்களின் முழு விஸ்தீரணத்திற்கும் அளிக்கப்படவில்லை என்ற நிலையில் அதன்மூலம் வாதியால் அனைத்து வழக்கு சொத்துக்கள் முழுமைக்கும் உரிமைமூலம் உள்ளது என்ற கட்சியானது உரிய ஆவணங்களின்றி ஏற்க இயலாது என்றும், அவை முழுமையாக நிராகரித்தக்கது என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

xvii) இதுதவிர மேற்படி தமிழ்நாடு இனாம் ஒழிப்புச் சட்டம், பிரிவு 8(2)(i)(b)–ன்படி நிபந்தனை உத்தரவினை நிறைவு செய்யவில்லையெனில் அதாவது தாவா இனாம் நிலங்களுக்கு இனாம் ஒழிப்பு சட்டம், பிரிவு 8(2)(i)(b)–ன்படி நியாயவாரத்துகையானது நில அனுபவஸ்தர்களான பிரதிவாதிகளால் செலுத்தப்படவில்லை மேற்படி சட்டம், 30/1963 பிரிவு 8(3)–ன்படி 8(3)–ன்படி நிலவருவாயை எவ்வகையில் வசூல் செய்யப்படமோ அதுபடியே நியாயவாரத்துகையை வட்டியுடன் வசூல் செய்யும் அதிகாரம் அரசுக்கு மட்டுமே உள்ள நிலையில் மேற்படி அரசை வாதியானவர் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்காத நிலையில் அதுகுறித்து கேள்வி எழுப்ப தாவாசொத்தில் எந்தவித

உரிமையற்ற வாதிக்கு சட்ட அருகதை கிடையாது என்ற பிரதிவாதிகள் தரப்பு கட்சியும், வாதமும் இந்த சூழ்நிலையில் ஏற்புடையது என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

xviii) பிரதிவாதிகள் தரப்பில் தாவாசொத்தைப் பொறுத்து வாதியை விட அதீத உரிமைமூலம் உள்ளது என்பது பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பி.வா.சா.ஆ.1 முதல் 115 வரையிலான பதிவு மற்றும் பதிவு மற்றும் வருவாய்துறை ஆவணங்கள் மூலம் நிருபணம் செய்யப்பட்டுள்ளது.

xix) தாவா சொத்தில் வாதிக்கு முன்இருப்பு உரிமை(pre–existing Right) இருந்து வந்தது என்பதும் நிருபணம் செய்யப்படாதநிலையில் வா.சா.ஆ.1 ஆவணத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு வாதியானவர் தாவாசொத்தில் தனக்கு மட்டுமே தனித்த உரிமைமூலம் உள்ளது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளது சட்டநிலையில் ஏற்புடையது இல்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

xx) மேலும் வாதியானவர் தான் தாக்கல் செய்த வழக்கு சங்கதிகளை தனது தரப்பு ஆவண மற்றும் வாய்மொழி சாட்சியங்களின் வாயிலாக நிருபணம் செய்து வழக்குப் பரிகாரங்களை பெற வேண்டுமே தவிர பிரதிவாதிகள் நியாயவாரத்துகையை செலுத்த தவறி விட்டதால் வாதியாகிய தனக்கு தாவாசொத்தில் உரிமைமூலம் கிடைத்து விட்டது என கட்சியும், வாதமும் **M.Narayanasamy Munthadi & Others vs. N.Kuppan and others, 2022 (4) M.L.J. 1** Our Honble High Court held that "the plaintiff has to stand or fall on his case and cannot rely upon the weakness of the defendant" என்ற தீர்நிலையில் சொல்லப்பட்டவாறு ஏற்கத்தக்கதில்லை என்றும், அவையாவும் முழுமையாக நிராகரிக்கத்தக்கது என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

xxi) ஆக வாதியால் தாவாசொத்தினைப் பொறுத்து உரிமைமூலம் உள்ளது என்பது ஆவண மற்றும் வாய்மொழி சாட்சியங்களின் வாயிலாக நிருபணம் செய்யப்படாநிலையில் வாதி இவ்வழக்கில் கோரியுள்ள தாவா சொத்தைப் பொறுத்து பிரதிவாதிக்கு எதிராக வாதி கோரியுள்ள விளம்புகை வாதிக்கு கிடைக்கத்தக்கதில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

xxii) முன்னரே விவரித்தவாறு தாவாசொத்தின் அனுபவம் மற்றும் சுவாதீனமானது இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு 12 ஆண்டுக்கு முன்பிருந்தது

என வாதியால் கட்சி செய்யப்படவுமில்லை, அதனை நிருபணம் செய்யும் வகையில் 12 ஆண்டுகளுக்கு உட்பட்ட எந்தவொரு ஆவணங்களும் வாதியால் தாக்கல் செய்யப்படவுமில்லை. ஆனால் அதேவேளையில் பிரதிவாதிகள் தரப்பில் 1901 ஆண்டு முதல் அனைத்து வழக்கின் சொத்தினையும் தொடர்ந்த எந்தவித இடையூறுமின்றி வாதி திருக்கோயிலுக்கு தெரிந்தே சட்டகாலத்திற்கு மேலாகவே அனுபவம் செய்து வருவது பி.வா.சாஆ.1 முதல் 115 ஆவணங்கள் வாயிலாக நிருபணம் செய்யப்பட்டநிலையில் தாவாசொத்தினைப் பொறுத்து வாதி கோரியுள்ள சுவாதீன பரிகாரம் சட்டநிலையில் பாதிப்புற்ற நிலையில் வாதிக்கு அப்பரிகாரமும் சட்டநிலையில் கிடைக்கத்தக்கது என்றே நீதிமன்றம் தீர்மானிக்கிறது. **அவ்வாறே எழுவினா எண்.3, 8, 9 ஆகியவைகளுக்கு வாதிக்கு எதிராகவே விடை காணப்படுகிறது.**

**உ. <u>முன்தீர்ப்பு தடைக் கோட்பாடு மற்றும் நீதிமன்ற ஆள்வரை அதிகாரம்</u> : –**

i) பிரதிவாதிகள் தரப்பில் "இனாம் ஒழிப்புச் சட்டம், 30–1963 அமுலுக்கு வந்த பிறகு சொத்துக்கள் அனைத்தும் அச்சட்டப் பிரிவு 3–ன்படி அரசுக்கு சென்றடையும், கோபிச்செட்டிபாளையம், இனாம் செட்டில்மெண்ட் தாசில்தார் S.R.No.244 of 1968–ல் பிறப்பித்த 30.11.1968 தேதிய உத்தரவுபடி ரயத்துவாரி பட்டாவும் அதில் கூறப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் தாவாசொத்தின் அனுபவஸ்தர்களான பிரதிவாதிகளின் முன் சுவான்தார்களுக்கு வழங்கப்பட்டு விட்டது, அதனை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடுகளும் மேதகு சென்னை உயர்நீதி மன்றத்தினால்(இனாம் ஒழிப்பு மேல்முறையீட்டு தீர்ப்பாயம்) 17.01.1991–ல் தள்ளுபடி செய்யப்பட்டு அதனை எதிர்த்து வாதி கோயிலால் எந்தவித மேல்முறையீடும் தாக்கல் செய்யப்படாதநிலையில் மேற்படி கோபிச்செட்டிபாளையம், இனாம் செட்டில்மெண்ட் தாசில்தார் அவர்களின் 30.11.1968 தேதிய உத்தரவு இறுதிநிலை அடைந்து விட்ட நிலையில் வாதி/திருக்கோயில் மேற்படி கோபிச்செட்டிபாளையம், இனாம் செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவில் சொல்லியுள்ள நிபந்தனைகளை பிரதிவாதிகள்/பிரதிவாதிகளின் முன்னோர் நிறைவு செய்யத் தவறி விட்டனர் என்பதால் தாவாசொத்தில் உரிமையை இழந்து விட்டனர் எனக்கூறி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளது முன்தீர்ப்பு தடைக் கோட்பாட்டால் பாதிப்படைந்துள்ளது" என கட்சியும், வாதமும் செய்யப்பட்டுள்ளது.

ii) அதுகுறித்து வாதி தரப்பில் "கோபிச்செட்டிபாளையம், இனாம் செட்டில்மெண்ட் தாசில்தார் S.R.No.244 of 1968–ல் பிறப்பித்த 30.11.1968 தேதிய உத்தரவுபடி ரயத்துவாரி பட்டா நிபந்தனையின் அடிப்படையிலேயே வழங்கப்பட்டுள்ளது, நிபந்தனைகளை நிலத்தின் அனுபவஸ்தர்கள் நிறைவு செய்யவில்லை என்பதால் செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவு பலன்களை மேற்படி இனாம் சட்டப்படி கோர முடியாது, அதனை பிரதிவாதிகளும் தங்களது சாட்சியங்களில் ஒப்புக் கொண்டு விட்டனர், இந்நிலையில் மேற்படி கோபிச்செட்டிபாளையம், இனாம் செட்டில்மெண்ட் தாசில்தார் உத்தரவின் அடிப்படையிலேயே வாதி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ள நிலையில் இவ்வழக்கானது முன்தீர்ப்பு தடைக் கோட்பாட்டால் பாதிப்படையவில்லை" என வாதம் செய்யப்பட்டது.

iii) அது குறித்து இரு தரப்பு வாதங்களையும் நன்கு பரிசீலனை செய்ததில் கோபிச்செட்டிபாளையம், இனாம் செட்டில்மெண்ட் தாசில்தார் S.R.No.244 of 1968–ல் 30.11.1968 தேதிய உத்தரவுபடி ரயத்துவாரி பட்டாவும் அதில் கூறப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் தாவாசொத்தின் அனுபவஸ்தர்களான பிரதிவாதிகளின் முன் சுவான்தார்களுக்கு வழங்கப்பட்டு விட்டது என்பதும், அதனை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடுகளும் மேதகு சென்னை உயர்நீதி மன்றத்தினால்(இனாம் ஒழிப்பு மேல்முறையீட்டு தீர்ப்பாயம்) 17.01.1991–ல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பது குறித்து இங்கு பிணக்கில்லை.

iv) அதனை எதிர்த்து வாதி கோயிலால் எந்தவித மேல்முறையீடும் தாக்கல் செய்யப்பட்டதாக கட்சி செய்யப்படவில்லை, ஆதரவு ஆவணங்களும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. இந்நிலையில் மேற்படி கோபிச்செட்டிபாளையம், இனாம் செட்டில்மெண்ட் தாசில்தார் அவர்களின் 30.11.1968 தேதிய உத்தரவு இறுதிநிலை அடைந்து விட்டதாகவே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. அதுகுறித்து வாதியே தனது பிராதிலும் ஒப்புக் கொண்டுள்ளார்.

v) இருந்த போதிலும் In **Ramakrishnan -vs- Mayilsamy, Second Appeal No. 1363 of 1993 dated 6/11/2006** Our Honble High Court held that “7. This second appeal was admitted based on the following substantial Questions of Law:- "1. Is the suit claim

maintainable and not barred by res judicata as provided in Section 43 and bar of jurisdiction prescribed in Section 46 of the Tamil Nadu Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 as the proceedings under the Act was allowed to become final?
2. Whether the courts below erred in law in declaring that the Plaintiffs are entitled to the suit property contrary to the revenue records and when the plaintiffs have failed to establish their possession and enjoyment of the suit properties for over the statutory period and when the plaintiff has restricted his claim to a lesser extent?....

